தமிழ்க் கடல் வாசகம்

மூன்றாம் புத்தகம்

சென்னை
இராஜதானிக் கலாசாலை மாஜித் தமிழாசிரியரும்
'தமிழ்க் கடல்' வெளியீட்டுப் பதிப்பாசிரியரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை:
தமிழ்க் கடல் ஆபீஸ்
சாந்தோம், மயிலை
பதிவு செய்தது] 1935 [விலை 7 அணு

Printed at
The 'Tamil Kadal' Press,
Madras.


முன்னுரை

இவ் வாசக புஸ்தகத்தில் வந்துள்ள பாடங்கள் படங்கள் அச்செழுத்து முதலிய அனைத்தும் புதியவை. வகுப்பிற்கு ஏற்க, உரை நடை நன்கு அமைந்துள்ளது.


வசன பாடத்திலும் செய்யுட் பாடத்திலும் வந்துள்ள அருஞ் சொற்களுக்குக் குறிப்புரைகள் இற்றில் சேர்க்கப்பட் டுள்ளன; அவை மாணுக்கருக்குப் பெரிதும் பயன்படுவன வாகும். வசன-பாடத்தின் குறிப்புரை அகராதி முறைப்படி அமைத்திருத்தலின், மாணுக்கர் அகராதி பார்க்கும் பழக்கமும் அடைவர்.

'கடலகம்'
சாந்தோம், சென்னை. } கா. நம.

அடக்கம்



[ஜகந்நாதம் :




22 - ஆம் பக்கம்]

தமிழ்க் கடல் வாசகம்

முதற் புத்தகம்

1. சிறுவருக்குரிய சிறந்த கடமை - I

சிறுவருக்குரிய சிறந்த கடமைகளுள், கீழ்ப்படிந்து நடப்பதே மிகச் சிறந்த கடமையாம். கீழ்ப்படிதல் என்பது, பெரியோர் சொன்னவற்றைப் பின்னிடாமல், உடனே செய்தலாம். பெரியோர், பேரறிவுடையவர்; எதையும் ஆராய்ந்து பார்ப்பவர். அதனால், அவர்கள் கூறியவற்றில் குற்றம் ஒன்றும் இராது என்று தேர்ந்து, சிறுவர் உவப்புடன் செய்ய உடன்படுதல் வேண்டும். உண்ணுதல், உறங்குதல், விளையாடுதல், வீண்பொழுது போக்குதல் முதலிய செயல்களைச் செய்யச் சொன்னால், அவர்கள் உடனே செய்ய உடன்படுவார்கள்: அவ்வாறே, தமக்கு உடம்பாடல்லாத செயலையும், அறிவில் முதிர்ந்தோர் செய்யச் சொன்னால், உடனே செய்ய உளங்கொள்ளவேண்டும்.



தந்தையும், பிள்ளையும்

தந்தை, தன் பிள்ளையை நோக்கி, 'நீ கல்வி கற்கக் கூடாதா? பாடங்களைப் படிக்கலாகாதா? ஏன் வீண்பொழுது போக்குகிறாய்?' என்று கேட்டால், பிள்ளை, 'யான் ஏன் கற்க வேண்டும்? ஏன் படிக்க வேண்டும்? சுவடி யெடுத்துப் படிப்பது எனக்குச் சுமையாகத் தோன்றுகிறதே!' என்று சொல்லக் கூடும். அப்படி அவன் சொல்வதற்கு நியாயம் என்ன? விளையாட்டிலேயே காலத்தைப் போக்கினால், பிற்காலத்தில், வினைத்திட்பம் ஏற்படாது என்பது அவனுக்கு இச் சிறுவயதில் தெரியாது. ஆதலால், சிறுவர் விளையாட்டிற் பயில்கின்றனர். ஆயினும், அதுபோலவே கல்விகற்றல் முதலிய சிறந்தசெயல்களிலும் பயிலவேண்டும்.

'நீ சட்டம் எழுதப் பழகு; திருத்தமான கையெழுத்து, சீர்மையை யுண்டாக்கும்' என்று சொன்னால், 'எனக்கு எழுத இஷ்டமில்லை; மேலும் கீழும், நீளமும் கோணலுமான வரிகளை இழுத்து எழுதுவது வீண்வருத்தம்' என்று சில சிறுவர்கள் சொல்வதுண்டு. அந்த வரிகளில் அடங்கியுள்ள பொருள்கள் இப்படிப்பட்டவை என்று அவர்களுக்கு இப்போது தெரியாது. அதன் பெருமை எப்படிப்பட்டது! அந்த வரிகளைப் பல யாண்டுகளாக அறிஞர் பலர் தேர்ந்து கண்டுபிடித்துக் காட்டி யிருக்கின்றனர். நாம் காண்பது, செய்வது, சிந்திப்பது முதலிய செயல்களைச் சிறு சிறு வரிகளாக

எட்டில் வரைந்து காட்டுவது எளிமையான செயலன்றோ! அப்படி வரைந்து காட்டுவதற்கு 'எழுத்து' என்று பெயர். அதன் மூலமாக நாம் எண்ணுவது, செய்வது முதலிய செயல்களைப் பல காதத்துக்கு அப்பாலுள்ள மாந்தரும் உணரும்படி, ஒரு கடிதத்தில் எழுதி அனுப்பலாமே; அவ்வாறே, அவர்கள் கருத்தையும் நாம் எளிதில் தெரிந்துகொள்ளக் கூடும்.

நாம் எண்ணும் எண்ணங்களையும், நமக்குத் தோன்றுங் கருத்துக்களையும் நாம் இக் காலத்தில் எழுதிவைத்தால், பிற்காலத்து மனிதர்கள் அவற்றைத் தெரிந்துகொண்டு, நல்ல நீதிகளை யுணர்ந்து, நலம்பெற வாழ்வார்க ளன்றோ! ஆதலால், எழுத்துக்கள் எவ்வளவு பயனுள்ளவை என்பதை எண்ணிப் பாருங்கள். எழுத்துக்கள் இல்லாவிட்டால், முற்காலத்துப் புலவர்கள் செய்து வைத்த செய்யுட்கள் எல்லாம் சீரழிந்து போயிருக்குமே!

2. சிறுவருக்குரிய சிறந்த கடமை - II

எழுதப் படிக்கத் தெரியாதவன் மனமோ, எப்புறத்தும் வழியில்லாத இருளடைந்த பெட்டிக்குள் அடைத்து வைத்த அரும் பொருள் போன்றது. அப் பொருள், எவரும் எடுத்துப்

பயன்படுத்த முடியாததுபோல், அவன் கருத்தில் தோன்றும் எண்ணங்களும் எவருக்கும் பயன்படாமற் போகும். அன்றியும், பண்டைக் காலத்துப் புலவர்கள் ஆராய்ந்து கண்ட அரும்பொருள்களை, அவர்கள் இயற்றிய நூல்களில் அறியவும் இயலாது. சிறுவர்கள் கற்றிருப்பின், அந்த நுண்ணிய பொருள்களை இப்போது எடுத்து ஆளக் கூடுமன்றோ ! எழுதவும் படிக்கவும் கற்றிருப்பது எவ்வளவு பயனுடையது !

'உபாத்தியாயர் கற்பிப்பதைக் கருத்துடன் கேள் ; அதை மனத்திற் பதிய வை. அவர் சொற்படி நடந்துகொள்' என்றால், சிறுவர்களுட் சிலர் அவ்வாறு செய்வதில்லை. உபாத்தியாயர் கற்பிக்குங் காலத்தே, சிலர் குறும்பு செய்து, அவர்மேல் குற்றங் கூறுவர். சிலர் அடங்காதவர்களாகி அசட்டை செய்வர். இவையெல்லாம் கெட்ட பிள்ளைகளின் செய்கைகளாகும். உபாத்தியாயரோ, அறிவிற் சிறந்தவர் ; ஆராய்ச்சியில் மிகுந்தவர் ; அனுபவத்தில் முதிர்ந்தவர். அவர் சொற்படி நடப்பதே சிறுவர்க்கு ஏற்ற செயலாகும்.

பெரியோரிடுங் கட்டளையில் சில குறைபாடுகள் இருப்பதாகச் சிறுவருக்குத் தோன்றுமாயின், அவற்றை அமைதியோடு கேட்டுத் தெரிந்துகொள்வது முறை. அவ்வாறின்றி, 'அவர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள் ;

நான் இப்படித்தான் செய்வேன்' என்று ஏறுமாறாகச் செய்வது நல்லியல்பு ஆகாது.

பிரஷியா தேசத்திலுள்ள இருப்புப்பாதையொன்றில், வண்டிக்குக் குறிகாட்டுவோன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் புகைவண்டி வெகு வேகமாக ஓடிவந்தது. குறிகாட்டுவோன், கொடியைக் காட்டிக்கொண்டேயிருந்தான். அப்போது அவனுடைய குழந்தை, வண்டி வரும் வழியில் ஓடவே, அவன் திடுக்கிட்டு, 'பிள்ளாய், அந்த இரும்புக் கம்பிகள் இரண்டுக்கும் இடையே கவிழ்ந்து படுத்துக்கொள்; அப்புறம் இப்புறம் சற்றும் அசையாதே' என்று கட்டளைபிட, அவன் சொன்ன வண்ணமே அக் குழந்தை படுத்துக்கொண்டு அசையாமல் இருந்தது. வண்டி நேரே ஓடிவிட்டது. அக் குழந்தைக்கு ஒரு சிறிதும் ஊறு உண்டாகவில்லை. உடனே குழந்தை எழுந்து, குதித்து ஓடிவந்து, தன் தந்தையை அடைந்தது. அவனது செய்கடனை யறிந்த அரசன், அவனுக்குப் பெரும் பொருள் பரிசு அளித்தான் என்னும் வரலாற்றை நீங்கள் அறிந்திருப்பீர்களே.

போர்வீரர், கப்பற்றொழிலாளர் முதலிய பலரும் தத்தம் தலைவர் கூறும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தே தீரவேண்டும்; 'என்? எப்படி?' என்று தடுத்துக் கேட்கலாகாது. அப்படிக் கேட்பாராயின், பெருந்தீங்கே விளை-

யும். அதனால், சிறுவர்கள், பெற்றோருக்கும் உபாத்தியாயருக்கும் கீழ்ப்படிந்து நடத்தல் சிறந்த கடமை என்பதை உணரவேண்டும்.

---

3. தாஜ் மஹல் - I

ஷாஜஹான் என்னும் மன்னர் பெருமான், ஏறக்குறைய முந்நூறு யாண்டுகளுக்கு முன், டில்லி நகரில் அமர்ந்து ஆட்சி புரிந்துவந்தான். அவன் அருந்திறல் வாய்ந்த அமைச்சர்களையும், வெற்றி மிக்க வீரர்களையும் அமைத்துக் கொண்டு, அரசியலைச் சிறப்புற நடத்தினான். அக்காலத்தே, அம் மன்னன், மாட்சிமை மிக்க மணியொன்றைத் தனது நல்வினைப் பயனால் அடையப்பெற்றான். அம் மணி, ஒரு பெண்மணி. அந்தப் பெண் மணி,



மங்கையர்க்கரசியாய், வனப்பும் வாய்மையும் ஒழுக்கமும் வாய்ந்து விளங்கிய மும்தாஜ் என்னும் கண்மணி யாவள். ஒருவன் இவ்வுலகில் எய்தப்பெறும் பொருள்களிலெல்லாம் சிறந்த

பொருளாவது நற்குண நற்செய்கை வாய்ந்த மனைவியே யன்றோ!

‘பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்’


என்னும் குறட்பா, இதனை வலியுறுத்தும்.

மும்தாஜ் என்னும் பெண்மணி, அரசியலில் அதிகாரம் பெற்று, தன் கணவனோடு ஒற்றுமையுற்று, அரசை நடத்தத் துணை நின்றாள். ஷாஜஹானுக்கு மும்தாஜ் கிடைத்த விதம் எப்படி?



ஷாஜஹானுக்குத் தந்தையான ஜஹான்கிர் என்பவன், ஆக்கிராநகரில் அமர்ந்து அரசு புரிந்துவந்தான். அக்காலத்தில் ஷாஜஹான், அமைச்சர் முதலிய பெருமக்களோடு, ஆண்டுதோறும் நடைபெறும் சந்தைக்குப் போவது வழக்கம். சந்தையில், உயர்குலப் பெண்டிர் மிகச் சிறந்த பொருள்களைக் கொண்டுவந்து விற்பர். ஜஹான்கிர், அப் ‘பெண்மக்கள் சிறந்த நவமணிகளைவிற்கவேண்டும்’ என்றும், ‘செல்வமுள்ள சீமான்கள் அப் பெண்கள் சொல்லும் விலைக்கே அவைகளை வாங்கவேண்டும்’ என்றும் கட்டளை யிட்டிருந்தான்.

அச் சந்தையில், ஹஸித்கானுடைய மகளாகிய மும்தாஜ் என்னும் பெண்மணி, நவமணிகளை நன்கு பரப்பி விற்றுக்கொண் டிருந்தாள். ஷாஜஹான் அவளை அணுகி, 'உன்னிடத்தில் உள்ள அரும்பொருள் யாது?' எனக் கேட்க, அவள் பளபளப்புள்ள வெண்மணியொன்றை எடுத்துக் காட்டி, 'இதுதான் என்னிடத்துள்ள சிறந்த மணி' என்றாள். ஷாஜஹான், 'இதன் விலை யாது?' என, மும்தாஜ், 'அண்ணலே, இஃது உமக்கு லக்ஷியமாயின், இதன் விலை லக்ஷம் ரூபாய்' என்றாள். ஷாஜஹான் அப் பெருந் தொகையைக் கொடுத்து, அம் மணியைப் பெற்றுக் கொண்டான். அவன், அவள் அழகில் இடுபட்டு, அவளோடு சிறிது நேரம் இன்புடன் பேசிக்கொண் டிருக்கையில், அவள் பேசும் திறம் வாய்ந்த பெண்ணரசி யெனக் கண்டான். அதற்குள் கையிலிருந்த மணி, தண்ணீர் விட்டுக் கசியத் தொடங்கிற்று. அதுகண்ட ஷாஜஹான், 'பெண்மணி, என்ன இது! நீ கொடுத்த வெண்மணி தண்ணீர் விட்டுக் கசிகிறதே!' என்று வியந்து கேட்க, 'அரசே, அதனை வாயிலிட்டுப் பாரும்' என்றாள்; ஷாஜஹான் அதனை உடனே வாயிலிட, அது சிறியதோர் கற்கண்டுக் கட்டியாக இருத்தலைக் கண்டான். ஷாஜஹான் அவளது கள்ளச் செயலை உணர்ந்து, உள்ளம் பூரித்து, 'பெண்மணி, என் செல்வத்தையே யன்றிச் சிந்தையையும்



தாஜ் மஹல்—பக்க வாட்டம்

கொள்ளை கொண்டாயே!' என்று வியந்து கூறி, அவளைத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அன்றே திருமணம் செய்துகொண்டான்.

---

4. தாஜ் மஹல் - II


தன் தந்தையின் காலத்துக்குப் பின், ஷாஜஹான் அரியணையில் அமர்ந்து, அரசாட்சிபுரியலானான். அப்பொழுது மும்தாஜின் ஆதரவுகொண்டு, சுமார் இருபது யாண்டுகள் அவன் அரசியலை நலம்பெற நடத்தினான். மகம்மதிய மன்னர் மனைவியார் பலரை மணந்துகொள்ளலாம் என்னும் விதியிருப்பினும், ஷாஜஹான் ஒரே மனைவியுடன் மனமொத்து வாழ்ந்திருந்தமை பெரிதும் பாராட்டத்தக்க செயலன்றோ! அவனுக்கு இருவர் மனைவியர் இருந்தனர் என்றும் சிலர் கூறுவர்.

ஷாஜஹான், தன் மனைவியுடன் மனமொத்து வாழ்ந்த காலம் இருபது யாண்டுகளாகும். அவள், மக்கள் பலரைப் பெற்றாள். அவள் கடைசிப் பிள்ளையைக் கருவுயிர்க்குங் காலத்தில், கருவிலிருந்த குழந்தையின் குரல் தன் காதிற் கேட்டதை யுணர்ந்து, கணவனை அருகில் அழைப்பித்து, 'என் அருமை மணா-

ளரே, கருப்பத்திலுள்ள குழந்தையின் குரல் என் காதிற் கேட்டது; அப்படிக் கேட்டோர் பிழைப்பதில்லையென்று பெரியோர் கூறுவர். நான் அதன் குரலைக் கேட்டேனாகையால், விரைவில் இறந்துபடுவேன். மரண காலத்தில் யான் வேண்டிக்கொள்ளும் இவ்வேண்டுகோளைத் தேவரீர் மாறாமல் செய்தருள வேண்டும்' என்று வேண்டினாள். அதனைக் கேட்ட ஷாஜஹான் மனம் உருக, கண்ணீர் வார, நாத் தழுதழுப்ப, தன் தலையைத் தாழ்த்தி, அவள் முகத்துக்கு அருகில் அமைத்து, 'என் கண்ணே, காதற் கிளியே, உன் எண்ணம் என்ன? என்னவாயினும் செய்தே தீருவேன்; அதனை வெளியிடு' என வேண்டினான்.

அதுகேட்ட மும்தாஜ் கண்ணீர் ஒழுக, 'என் அன்பே, ஆருயிரே, யான் இறந்த பிறகு தாம் வேறு ஒருத்தியையும் விவாகம் செய்துகொள்ளக் கூடாது; என் பெயர் எந்நாளும் இவ்வுலகில் நிலைநிற்குமாறு சிறந்ததோர் கோரி கட்டிவைக்க வேண்டும்; இவ்விரண்டே என் விருப்பம்' என்று சொல்லி, சிறிது நேரத்தில் உயிர் துறந்தாள். அவள் கேட்ட அவ்விரண்டு வரங்களையும் ஷாஜஹான் தன் வாழ்நாளில் நிறைவேற்றினான்.

ஆக்கிரா நகரத்தில், யமுனை யாற்றங்கரையில், ஓர் அழகிய தோட்டத்தின் நடுவில், உலகத்தில் சிறந்த உன்னதமான கோரி



தாஜ் மஹல் — முற்புறம்

ஒன்றை ஷாஜஹான் கட்டி முடித்தான். அது, மிகச் சிறந்த அழகிய வேலைப்பாடுள்ளது; சலவைக் கற்களாலும், நவமணிகளாலும் அமைக்கப்பெற்றது. அதைக் கட்டி முடிக்க இருபது யாண்டுகள் சென்றன. அவன் மும்தாஜ் என்னும் பெண்மணியோடு வாழ்ந்த காலமும் இருபது யாண்டே யன்றோ!


கோலகொண்டா, இலங்கை, காபூல் முதலிய பல இடங்களிலிருந்து சிறந்த அரதனங்களைத் தருவித்தான். இத்தாலியா (Italy) தேசத்திலிருந்து திறமை வாய்ந்த பணியாளர்

வந்து அக் கட்டடத்தை அழகுபெறக் கட்டி முடித்தனர். ஷாஜஹான், அந்த அழகிய கோரிக்குத் 'தாஜ்மஹல்' எனப் பெயரிட்டான். அதன் காட்சி, இன்றும் புத்தம் புதிதாகவே விளங்குகின்றது. பலர் அதனைப் பார்க்கச் செல்கின்றனர். 'இத்தகைய அழகிற் சிறந்த கட்டடம் இவ்வுலகில் வேறு இல்லை!' என்று அதனைக் கண்டோர் வியந்து கூறுகின்றனர்.

5. சொன்ன சொல் தவறாமை

நமது ஜார்ஜ் சக்கரவர்த்திக்குப் பாட்டியாராய் விளங்கிய விக்டோரியா மகாராணியார் அரசு புரிந்த காலத்தில், சங்கீதத்தில் தேர்ச்சிபெற்ற நில்சன் என்னும் துரைமகள், விடுமுறைக் காலத்தில் லண்டன் நகரத்திற்கு வந்தனர். அந்த அம்மையார், கேட்போர் மனத்தைப் பிணிக்கத் தக்க இன்னிசை பாடும் நல்லியல் வாய்ந்தவர். அதனால் அவர் ஆங்காங்கே பாடி, பற்பல பரிசுகள் பெற்று, பலராலும் நன்கு பாராட்டப்பெற்று வந்தனர்.

நில்சன் அம்மையார் லண்டன் நகரத்தை அடைந்திருந்த காலத்தில், துறவறம் பூண்ட கன்னியர் சிலர் வந்து, அவ்வம்மையைக் கண்டு, 'அம்மையே, யாங்கள் ஏழைப் பெண்களுக்காக



ஒரு பாடசாலை வைத்து நடத்தி வருகின்றோம்; தாம் பாடும் இன்னிசையைக்கேட்க அப்பெண்களும் யாங்களும் பெரிதும் அவாவுகின்றோம்; யாங்கள் தங்கள் இன்னிசையைக் கேட்கவும், அதனைப் பின்பற்றிப் பாடவும் பெரிதும் விழைகின்றோம்; எங்கள் பாடசாலைக்குத் தாங்கள் விஜயஞ்செய்து பாடவேண்டும்' என்று வேண்டிக் கொண்டனர். 'அப்படியே ஆகட்டும்; ஏழைப் பெண்களுக்கு உவப்பு உண்டாகச் செய்வதே எனக்கு விருப்பம்' என்று சொல்லி, அதற்காக ஒரு நாள் குறித்து, அன்று மாலை ஐந்து மணிக்கு வருவதாக நில்சன் அம்மையார் ஒப்புக்கொண்டனர். கன்னியர் வாழ்த்துக்கூறி, விடைபெற்றுச் சென்றனர்.

பிறகு, மஹாராணியாருடைய சங்கீதத் தலைவன், அவரது உத்தரவின்படி, நில்சன் அம்மையாரிடம் வந்து, 'அம்மையே, பக்கிங்காம் அரண்மனையில் இன்று ஒரு சங்கீத கச்சேரி நடக்கிறது; அங்கே தங்களைப் பாடவரும்படி நம் மஹாராணியார் விரும்புகின்றனர்' என்று தெரிவித்தான். அன்று பெண்பாடசாலைக்கு வருவதாக நில்சன் அம்மை வாக்களித்திருந்தமையால், அவர், வந்த தலைவனிடம், 'ஐய, இன்று யான் வருவதற்கு இல்லையே! யான் ஐந்து மணிக்கு ஒரு பாடசாலையில் பாட வருவதாக ஒப்புக்கொண் டிருக்கின்றேனே! மஹாராணியாருடைய கட்டளையின்படி நடந்து-

கொள்ள முடியாதே! என்ன செய்வது! மற்ரொருநாள் வரும்படி மஹாராணியார் கட்டளையிட்டால், வரக் காத்திருக்கிறேன்; மன்னிக்க வேண்டும்' என்றனர். அதுகேட்ட தலைவன், 'மஹாராணியார் கட்டளையைக் கருதவேண்டாவோ? இந் நகரத்துக்கு வரும் பண்டிதர் அனைவரும், முதல் முதலில் அரசவைக்குச் சென்று கௌரவம் பெறுவதே சிறப்பென எண்ணுகின்றனரே; நீர் அதற்கு மாருகப் பேசுகின்றீரே!' என்று சொல்லி, சிந்தித்து நின்ருன். அதுகண்ட நில்சன் பெருமாட்டி, 'மெய்தான் ஐயா, பாடசாலைக் கன்னியர்க்குச் சொன்ன சொல் தவறக் கூடாதே' என்று கூறி, அவனை அனுப்பிவிட்டனர்.


வாத்தியத் தலைவன், நடுநடுங்கி, 'இம்மாது மறுத்துக் கூறியதை மஹா ராணியாருக்கு எவ்வாறு சொல்வது!' என்று எண்ணமிட்டுக்கொண்டே திரும்பிப் போய்விட்டான். ஆயினும், அவனுக்கு வேறு வழி யில்லை; அவன், ராணியாரிடத்திற் சென்று, நடந்ததை நடந்தவாறே சொன்னன். மஹா ராணியார் அது கேட்டு, 'அப்படியா, சரிதான்; அப் பெண்பாடசாலை எனக்கும் தெரியும்; எவரும், சொன்னதைச் சொன்னவாறு செய்தே தீரவேண்டும்; அவள் உறுதிப்பாட்டை வியக்கின்றேன். அவள் பெயரை மற்ரொரு பாட்டுக்கச்சேரிக்குக் குறிப்புப் புத்தகத்தில் பதிந்து வைத்துக்கொள்.

நீ மறுபடியுஞ் சென்று, அவளைக் கண்டு, "என்றைக்கு வரக்கூடும் ?" என்று கேட்டுவா' எனக் கட்டளை யிட்டனர். அவனும் அவரிடம் சென்று, மஹாராணியார் கூறிய மகிழ்ச்சியுரையை வெளியிட்டு, அவருக்கு அனுகூலமான நாளைக் குறித்துக்கொண்டு வந்தான்.

சிறுவர்களே, நில்சன் துரைமகள் மேற்கொண்டிருந்த மனப்பான்மையையும் உறுதிப்பாட்டையும் உற்று நோக்குங்கள். மற்றவர்களாயின், மஹாராணியார் விருப்பத்தை மறுக்க முடியாமல், பாடசாலை அதிகாரிகளுக்கு, 'மற்றொருநாள் ஆகட்டும்; இன்று, மஹாராணியார் என்னை அழைக்கின்றார்' என்று எழுதியனுப்பியிருப்பார்க ளன்றோ! அவ்வாறு எழுதாமல், சொன்ன சொல்லைத் தவறாது நிறைவேற்றவேண்டும் என்னும் உறுதிகொண்ட பெண்மணியின் சிறப்பே சிறப்பு! அவர் மறுத்து உரைத்ததை மனங்கொள்ளாமல், மகிழ்ச்சியடைந்த மஹாராணியாரின் மாண்பே மாண்பு!

6. பீங்கான் கோபுரம்

முற்காலத்தில் சீன தேசத்திற்குத் தலைநகராய் விளங்கியது நான்கின் (Nankin) என்னும் நகரமாகும். அந் நகரத்தில் அந் நாளில் விளங்கிய



பீங்கான் கோபுரம்

மெத்தை மேடைகளும், மாட மாளிகைகளும் சிதைந்து அழிந்து போகவே, அப் பேர்பெற்ற நகரம், இந்நாளில் ஒரு சீரற்ற சிற்றூராயிருக்கிறது. சில யாண்டுகளுக்குமுன் அங்கே நடைபெற்ற பெரும் போரினால், அந் நகரம் சீரழிந்து சிதைந்து போயிற்று. ஆயினும், ஒரு காலத்தில் அது சிறந்த நகரமாயிருந்தது என்பதற்கு அறிகுறிகள் ஆங்காங்கே இப்போதுங் காண்கின்றன. அவற்றுள், பீங்கான் கோபுரமும் ஒன்று; அது, கண்டோர் அனைவரும் வியந்து கூறத்தக்க சிறப்பினை யுடையது.

அப் பீங்கான் கோபுரம், பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அங்கே செங்கோல் செலுத்திய மன்னர்மன்னன் ஒருவனால் கட்டப்பட்டது. அவன், தன் அன்னையின்பெயர் இவ் வுலகில் என்றென்றும் நிலைநிற்குமாறு அதனை நிருமித்தான். அவன் அன்னை நற்குண நற்செய்கைகள் வாய்ந்தவளாய், பெண்ணரசியாய், பெயர் பெற்று விளங்கினாள். அவ்வாறே அக்கோபுரம் இடும் எடுப்பும் இல்லாததாய் என்றும் விளங்க நிலையாய் நின்றது. அதனைக் கட்டி முடிக்க இருபது யாண்டுகள் சென்றன. அதன் அழகையும் தோற்றத்தையும் முன் பக்கத்துப் படத்தில் ஒருவாறு காணலாம்.

பொருள்களைப் படங்களிற் காணும்போது, சில, மிக்க அழகாகத் தோன்றும்; சில, அழகு குறைந்து தோன்றும். பொருள்-

களின் அருமை பெருமைகள் உருவப் படங்களில் விளங்கத் தோன்றுவது அரிதாகும்; அத்தகைய பொருள்களுள் இக் கோபுரத்தையும் ஒன்றாகக் கூறலாம்.

இப் பீங்கான் கோபுரம், ஒன்பது நிலைகள் உள்ளது; இருநூறு அடி உயரமுள்ளது; அடிமுதல் நுனிவரையில் பளபளப்பான வர்ணமிட்ட பீங்கான்கள் பதிப்பிக்கப்பெற்றது; ஒவ்வொரு நிலையின் நடுவிலும் ஒரு பெரிய பித்தளைக் குண்டு அமைத்து, அதினின்றும் எட்டு மூலைக்கும் எட்டு இருப்புச் சங்கிலிகள், மணிகள் கோத்துத் தொங்கவிடப்பட்டுள்ளன. விளக்குக்களை மாட்ட வசதியான ஏற்பாடு உண்டு. அவ் விளக்குக்களை யெல்லாம் ஏற்றிவிட்டால், பேரொளி வானத்தில் பரவி, அது, பார்ப்போர் கண்ணைப் பறிக்கத் தக்க விதமாய் ஒளிரும். பல வகையான முத்துக்கள், விலை யுயர்ந்த கற்கள், பொன், வெள்ளி, பட்டு முதலிய பொருள்கள், இரண்டு பித்தளைக் கலசங்களில் வைத்து, அக்கோபுரத்தின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ளன. அப் பொருள்கள் அனைத்தும் சீன தேசத்துப் பொருள்களே; அவற்றுள் தேயிலையும் ஒன்று.

‘தந்தை தாய்ப் பேண்’ என்னும் அமுத வாக்கியத்திற்கு உதாரணமாக, அக் கோபுரம் நின்று விளங்கிற்று. அஃது, இப்பொழுது என்ன நிலையில் இருக்கின்றது? முற்காலத்தில்

சிறப்புற்றிருந்த பொருள், பிற் காலத்தில் சிதறுண்டு போவதும் உண்டு. 1856 - ஆம் வருஷம், சீன சக்ரவர்த்திக்கும் கலகக்காரர் சிலருக்கும் போர் நடந்தபோது, கலகக்காரர் அப் பீங்கான் கோபுரத்தைத் தகர்த்து நாசஞ்செய்துவிட்டனர். இவ் வுலகத்தில் சிறந்த காட்சிப் பொருள்களுள் ஒன்றாயிருந்த அப்பீங்கான் கோபுரம் உருவழிக்கப்படா திருந்தால், இப்போது க்ஷீணதசையி லிருக்கும் நான்கின் நகரம், எவரும் கண்டு வியக்கத்தக்க எழில் வாய்ந்து இலகுமன்றோ!

—•—

7. ஜகந்நாதம்

ஜகந்நாதம் என்னும் க்ஷேத்திரம் கல்கத்தா நகரத்திற்குத் தென்மேற்கில், சுமார் இருநூற்றைம்பது மைல் தூரத்தில், ஒட்டிர தேசத்தில் இருக்கின்றது. அஃது இந்துக்களுக்கு ஏற்பட்டுள்ள புண்ணிய ஸ்தலங்களுள் ஒன்று. அந்த நகரம், ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பல நாட்டவர்களுக்கும் நன்கு தெரிந்தது என்கின்றனர். அதற்குக் காரணம் என்ன?

ஜகந்நாதத்தி லுள்ள கோயிலில், கண்ணபிரான் திருவுருக்கொண்டு விளங்குகின்றனர். அங்கே பல யாண்டுகளுக்கு ஒரு முறை தேர்த்-

திருவிழா நடைபெறும்; அப்போது பகவத் பக்தர்களுட் சிலர், தம் உடலைப் பகவானுக்குப் பலியாக அர்ப்பணம் செய்துவிடுவர். அதனால் தமக்கு மோக்ஷம் கிடைக்கும் என்பது அவர்களுடைய கொள்கை; தம் மனத்தில் பகவானுடைய கல்யாண குணங்களையே தியானம்



செய்துகொண்டு, தேரோடுந்தெருவில்குறுக்கே விழுந்து, தம் உயிரைத் தியாகம் செய்து வந்தனராம். அதனால்தான் அந்த க்ஷேத்திரத்தின் பெயர் ஐரோப்பா முழுவதும் பரவுவதற்கு ஏதுவாயிற்று என்கின்றனர். இப்போது அந்த வழக்கம் அறவே நீங்கிவிட்டது.

ஜகந்நாதத்திற்குப் 'பூரி' என்னும் பெயரே வடநாட்டில் வழங்கி வருகிறது. அந் நகரத்தில் அநாகரிகமான கட்டடங்களும், சீர்திருத்தமின்றி அழகற்ற தெருக்களும், தெருப் புறங்களில் குறுகிய தாழ்வாரமிறக்கிய வீடுகளும் காணப்படுகின்றன. தெருக்கள், வீடுகள், தோப்புக்கள், தோட்டங்கள் முதலிய இடங்களிலெல்லாம் குரங்குகள் கூட்டங் கூட்டமாய் வசிக்கும். குளம் குட்டை முதலிய நீர்நிலைகளில் முதலை முதலிய துஷ்டஜந்துக்கள் வாழும்.

பூரி நகரத்தில் மாடவீதிகள்மட்டும் அதிக விசாலமானவை. அவ் வீதிகளின் இடையில் சிறந்த கோயிலொன்று விளங்குகின்றது. அக் கோயில் நாற்சதுரமானது; உயர்ந்த கல்மதிலால் சூழப்பெற்றது.


கோபுர வாயிலண்டை ஓலையாலும் தழையாலும் குடிசைகள் அமைத்துக் கொண்டு, அவற்றில் வைராகியர் வாசஞ் செய்கின்றனர். அக் கோபுர வாயிலில் அவர்களுடைய குடை கூடை முதலிய பொருள்கள் எப்போதும் நிறைந்திருக்கும். அக் கோயில் வாயிற்படியின் இருபுறங்களிலும் இரண்டு சிங்கப் பிரதிமைகள் பீடத்தின்மேல் அமைக்கப்பெற்று உள்ளன. கோயிலின் முன்புறத்தில் கருங் கல்லினாற் செய்த துவஜ ஸ்தம்பம் ஒன்று நாட்டப்பட்டுள்ளது. அதன் சிகரத்தில் அநுமான் உருவம் அமைந்திருக்கின்றது.

ஜகந்நாத க்ஷேத்திரத்தில் சிறந்த வழக்கம் ஒன்று உண்டு. ‘சர்வம் ஜகந்நாதம்’ என்பது பலரும் கூறும் ஒரு பழமொழி. அந்தத் திவ்ய-க்ஷேத்திரத்தில் மேலோர் கீழோர் என்னும் வேற்றுமை சிறிதும் இன்றி, நானாஜாதியாரும், பரமனுக்குப் படைத்த அன்னத்தை ஒருங்கு கூடிப்பகிர்ந்து உண்ணுவர்; ‘பகவான் சந்நிதானத்தில் ஏற்றத் தாழ்வு இல்லை’ என்று கூறுவதற்கு இஃது ஒரு திருஷ்டாந்தமன்றோ!

8. சாய்ந்த கோபுரம்

இத்தாலி (Italy) தேசத்தோடு இணைந்துள்ள பைசா (Pisa) நகரத்தில் உயர்ந்த கோபுரம் ஒன்றுண்டு. அது ஜர்மானிய சிற்ப சாஸ்திரி ஒருவனால் கி.பி. 1150-ஆம் வருஷத்தில் கட்டப்பெற்றது. அதன் அருகில் சிறந்ததோர் ஆலயம் அமைந்துளது. அந்தக் கோயிலின் மணியைக் கட்டுவதற்காகவே அந்தக் கோபுரம் நிருமிக்கப்பட்டதாம்.

பைசா நகரத்துக் கோபுரம் வெள்ளைக்கல்லினால் இயன்றுள்ளது. அஃது அடி பருத்து, நுனி சிறுத்து, அழகிய தூண்கள் அமையப்பெற்று, வட்ட வடிவமான எட்டு நிலைகள் உள்ளதாய் விளங்குகிறது. அதன் உயரம் 188 அடி.



அதன் உச்சியில் தளம்போட் டிருப்பதனால், அங்கே ஏறிப் பார்ப்பவர்களுக்குச் சுற்றுப்புறங்களில் வெகு தூரம் வரையில் காட்சிகள் கண்ணுக்குத் தோன்றும்.

அக் கோபுரம் நேரே ஒழுங்கா யிராமல், சற்றுச் சாய்வாய் நிற்பதனால், அதைக் காண்போர் அனைவரும், ‘இஃது எப்படி நிற்கிறது!’ என்றெண்ணி, ஐயமும் ஆச்சரியமும் அடைவர். ஏதேனும் ஒரு பொருளைக் கயிற்றில் கட்டி, அக் கோபுரத்தின் உச்சியிலிருந்து நேராகக் கீழே தொங்க விட்டால், அஃது அடிவாரத்துக்குப் பதினைந்தடி தூரத்தில் விழுகின்றது.

‘எந்தப் பொருளும், அதன் உச்சியின் நடுவிலிருந்து ஒரு கோடு இழுத்தால், அந்தக் கோடு அடிவாரத்தின் நடுவில் விழுந்தால்தான் அப் பொருள் நிலையாக நிற்கும்; இல்லாவிடில் அது விழுந்துபோம்’ என்பது ஒரு சித்தாந்தம். அதன்படியே. அந்தக் கோபுரத்தின் உச்சியின் நடுவினின்றும் ஒரு நேர்கோடு விழுவதாக நினைத்துக் கொண்டால், அஃது அதன் அடிவாரத்தின் நடுவில் விழுவதாகவே தோன்றுகிறது; அதனாலே அக் கோபுரம் நிலையாக நிற்கிறது என்று பலர் சொல்லுகின்றனர்.

சிலர், ‘அப்படிச் சொல்வதற்கு ஆதாரம் ஏதும் இல்லை; அது கட்டப்பட்ட உறுதிப்பாட்டினால் நிலையாக நிற்கிறது’ என்கின்றனர். ‘பூகம்பத்தினால் அக் கோபுரம் சாய்ந்திருக்க-

லாம்' என்று சிலர் நினைக்கின்றனர். மற்றுஞ் சிலர், 'கட்டும்பொழுதே "இது சாய்ந்து காட்ட வேண்டும்" என்னும் கருத்தோடே கட்டப்பட்டிருக்கலாம்' என்கின்றனர். அதுவே அநேக சிற்ப சாஸ்திரிகளுக்கு ஏற்ற காரணமாகத் தோன்றுகிறது.

தஞ்சாவூர் ஜில்லாவில் திருச்செங்காட்டங்குடி என்னும் ஸ்தலம் ஒன்று இருக்கிறது. அது சிறுத்தொண்டநாயனார் அவதாரம்செய்த க்ஷேத்திரம். அங்குள்ள கோயிலின் கோபுரம் வட புறமாகச் சிறிது சாய்ந்து நிற்கிறது. அதற்கும் மேற்கண்ட காரணங்களுள் ஏதேனும் ஒன்று இருக்கலாம் போலும்!

பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரத்தையே சாதனமாகக் கொண்டு காலிலியோ (Galileo) என்னும் வான சாஸ்திரி, பூமியின் கவர்ச்சியைப் பற்றிய பற்பல நியாயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்.

ஒவ்வொன்றையும் ஊன்றிப் பார்ப்பதனால் உண்டாகும் பயன் மிகப் பெரியதாம். இந்தச் சிறிய சாய்ந்த கோபுரத்தைக் கண்டு, இவ்வளவு பெரிய உலகத்திற்கு ஏற்பட்டுள்ள கவர்ச்சியின் வன்மையைக் கண்டறிந்தது அருமையிலும் அருமையன்றோ?

9. ஒட்டகமும், அதன் பயனும்

தமிழர்களுக்கு நெடுங் காலமாகத் தெரிந்துள்ள விலங்குகளுள் ஒட்டகமும் ஒன்று. ஒட்டகம் அறிவிற் சிறந்தது; அழகிற் குறைந்தது. அதன் உருவம் அதிக விகாரமாகத் தோன்றும்.


ஒட்டகம் ஆப்பிரிக்கா, அரேபியா முதலிய நாடுகளில் மணற்பாங்கான பாலைநிலங்களில் மிகுதியாக வாழ்கின்றது. வேறு எந்த விலங்குகளாலும் கடந்து செல்ல முடியாத பாலைநிலங்களில் ஒட்டகம் ஒன்றே விரைந்து நடந்து செல்லத் தக்கதாகும். அதன் கால்கள் நீண்டு, அடிகள் சதைப்பற்றுள்ளனவாய் அகன்று இருக்கின்றன ; அதனால், ஒட்டகம், மணல்வழிகளில் நடந்துசெல்ல, அதன் அடிகள் ஏற்றவையாய் இயைந்துள்ளன. ஒட்டகத்தின் மேலுதடு பிளவுபட்டிருப்பதனால், அது, தன் இரையைக் கடித்து அருந்துவதற்கு அனுகூலமாயிருக்கிறது.

மணல்வெளிகளில் சுழல்காற்று வீசும்போது, அம் மணல் அதன் மூக்கில் புகாதபடி, மூக்குத் தொளைகளுக்குள் ஒரு வகை ஜவ்வு தொங்கிக்கொண் டிருக்கும். ஒட்டகம் சுமார் இருபது நாள்வரையில் தண்ணீர் குடியாமலே பிரயாணஞ் செய்ய வல்லது. இக் காரணம்பற்றியே ஒட்டகத்திற்குப் 'பாலைநிலக் கப்பல்' என்னும் பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஒட்டகம் இல்லாவிடில், அரபியர் கதி அதோகதிதான்.



ஒட்டகம்

அரேபியர் குடும்பத்துடன் ஒட்டகத்தின்மேல் ஏறிப் பிரயாணஞ் செய்வர்; வர்த்தகர், சாமான்களை ஏற்றிக்கொண்டு ஆங்காங்கே சென்று, வர்த்தகம் புரிவர். சாமான்களை ஏற்றும்போது ஒட்டகம் முழங்காற் படியிட்டுப் படுத்துக்கொள்ளும். அதன்மீது ஏற்றப்பட்ட




சுமை அதிக பாரம் உள்ளதாக அதற்குத் தோன்றினல், அஃது எழுந்திராமல் படுத்துக்கொண்டே யிருக்கும். அப்பொழுது அதன் பாகன் ஒரு சிறு மூட்டையையேனும், ஒரு பெருங் கல்லையேனும் அது காணும்படி எடுத்து அப்புறம் எறிந்துவிடுவான்; உடனே, அஃது எழுந்து செல்லத்தொடங்கும். ஒட்டகம் பயணம்

செய்யும் பொழுது சோர்வு அடைந்ததானால், அஃது இளைப்பாறும்படி ஓர் இடத்தில் நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை; ஓர் இனிய பாடலை அது கேட்கும்படி பாடினாற் போதும்; உடனே அது விரைந்து ஓடத் தலைப்படும்.

நமது நாட்டில் பசு பயன்படுவதுபோல் அரேபியா தேசத்தில் ஒட்டகம் பயன்படுகிறது. அரபியனுக்கு ஒட்டகம் ஒன்று இருந்தால் போதும்; அஃது ஒன்றைக்கொண்டே அவன் காலம் கடத்தலாம். ஒட்டகத்தின் பால் அவனுக்குச் சிறந்த உணவாகும். நமக்குப் பசுவின் பால் பயன்படுவதுபோல், அவனுக்கு ஒட்டகத்தின் பால் பயன்படுகிறது. ஒட்டகத்தின் உரோமம், சிறந்த உடைகள் செய்ய உதவியாகும். அதனால், அரபியர் கூடாரத்துக்கு வேண்டிய முரட்டுத் துணிகளையும் நெய்துகொள்ளுவர். ஒட்டகத்தின் மாமிசத்தையும் அரபியர் உணவாகக் கொள்ளுகின்றனர்; அது மிக்க சுவையுள்ளது என்பர்.

தண்ணீர் கிடைக்காமல் தாகத்தால் தவிக்குங் காலங்களில், அரபியர் ஓர் ஒட்டகத்தைக் கொன்று, அதன் வயிற்றிலுள்ள தண்ணீரை எடுத்துப் பருகுவர். இப்படிச் செய்வது தண்ணீரின்றி விடாய்ப் பட்டு, உயிருக்கு இறுதி உண்டாகுங் காலத்தில்மட்டுமே யாகும். ஒட்டகம் மிக்க விலையுள்ளதாதலால், அதனை எளிதிற் கொல்ல எவரேனும் இசைவரோ!

பாலைவனங்களில் ஆங்காங்குப் பசும்புற்றரைகள் காணப்படும்; அங்கு நீர்நிலைகளும் உண்டு; பேரீச்ச மரங்கள் பெரிதும் வளர்ந்திருக்கும். அவ்விடத்திற்குப் 'பாலை நிலச் சோலை' என்று பெயர். அவ்விடங்களில் அராபியர் தங்கி இளைப்பாறுவர்; உணவு சமைத்தும் உண்பர். ஒட்டகங்களும் படுத்து இளைப்பாறும்.



சில ஒட்டகங்களுக்கு இரண்டு திமில்கள் உண்டு. அவ் வொட்டகங்கள் கல்லடர்ந்த மலைநாடுகளில் சவாரி செய்ய உதவும். ஆப்கானிஸ்தானத்திலிருந்து திபேத்து வழியாகச் சீனாவுக்குச் செல்லும் ஒட்டகங்கள் இந்த வகையைச் சேர்ந்தவையே. அவை குறுகிய கால்கள் உள்ளவை. முசுக்களின்மேல் மயிர் அடர்ந்து

தொங்கும். அம் மயிரினால் சிறந்த கம்பளங்கள் செய்யப்படும்.

ஒட்டகத்தின் இரத்தம், அவ்வப்போது உண்டாகும் சீதோஷ்ணங்களுக்குத் தக்கவாறு மாறுபடும். அதனால்தான் மிக்க வெயிலையும், மிக்க குளிர்ச்சியையும் அது தாங்கத்தக்கதாயிருக்கின்றது.

ஒட்டகத்திற்குத் தக்க உணவு கொடுத்தால், அதன் முசுப்புக் கொழுத்துப் பருத்து வளரும். அஃது உணவின்றிப் பட்டினியாயிருக்கையில், அக் கொழுப்புக் கரைவதனால் முசுப்புச் சிறுத்துச் சுருங்கிப்போகும்.

சவாரிக்கான ஒட்டகம் சாதாரணமாக மணி ஒன்றுக்கு எட்டுமைலுக்குக் குறையாமற் செல்லும். சுமையைத் தாங்கிச் செல்லும் ஒட்டகம், மணிக்கு நான்கு மைலுக்குமேற் செல்லாது.

ஒட்டகம், தன்னை வளர்ப்பவர்களிடத்தில் பேரன்புடையது. அஃது, அவர்களுக்கு உண்மையாய் ஊழியஞ் செய்யும். இதனை விளக்க வழங்குங் கதைகள் எண்ணிறந்தன. அரபியரும் அதனைத் தம் மக்களேபோல் அன்புறப் பாராட்டி நடத்துகின்றனர்.

10. லிட்டன் பிரபு

1875 - ஆம் வருஷத்தில் இந்துதேசத்தின் ராஜப் பிரதிநிதியாகி விளங்கிய லிட்டன் பிரபு (Lord Lytton) 1831 - ஆம் வருஷம் நொவெம்பர் மாதம் 8 - ஆந் தேதி லண்டன் நகரத்திற் பிறந்தவர். இவர் சிறந்த அங்கிலக் கவிகளுள் ஒருவர். இவருடைய தந்தையார் பற்பல புதுக்கதைகளும், செய்யுட்களும், நாடகங்களும் இயற்றியவர்; பார்லிமெண்ட் (Parliament) என்னும் 'ஜனப்பிரதிநிதி சபை'யில் ஓர் அங்கத்தினராய்ப் புகழ்பெற்று விளங்கினவர். அவருக்கு இவர் ஒரே புதல்வர்.

லிட்டன்பிரபு, முதலில் ஜெர்மனிதேசத்திலுள்ள ஹாரோ (Harrow) நகரத்திலும், பிறகு, பான் (Bonn) நகரத்திலும் கல்வி கற்று, தேச பாஷைகள் பலவற்றில் பயின்று, தேர்ச்சி பெற்றார். புதிதாகப் பாஷைகளைக் கற்பதில் அவருக்கு விருப்பம் அதிகம்.

லிட்டன் பிரபு, சுமார் பதினெட்டுவயதில் அரசாங்கஉத்தியோகத்தில்அமர்ந்தார்;முதலில் அமெரிக்கா கண்டத்தின் வாஷிங்டன் (Washington) நகரில் அங்கிலமந்திரிக்குக் காரியதரிசியாயிருந்து, பிறகு, பிளாரென்ஸ் (Florence) நகரில் ஸ்தானாதிபதியாகி, அதன் பின்னர், பாரிஸ் (Paris) பட்டணத்தில்அவ்வேலைக்கே நியமிக்கப் பெற்றார்; 1856 - ஆம் வருஷத்தில் அங்கே



விட்டன் பிரபு

சமாதானத்தை உண்டாக்கி, அவ்விடத்தை விட்டு, ஹேக் (Hague) நகரத்துக்கு உத்தியோகஸ்தராய்ச் சென்றனர்; பின்னர், சென்ட் பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg), கான்ஸ்தாந்திநோபில் (Constantinople) ஆகிய இரண்டு இடங்களிலும் ஸ்தானாதிபதியா யிருந்து, 1859 - ஆம் வருஷம் ஜனுவரி மாதம் 6 - ஆந் தேதி வியன்னா (Vienna) நகரத்திற்குச் சென்றார். அவர் அக்காலத்தில் பெல்கிறேட் (Belgrade) நகரத்துக்குத் தூது சென்று, துருக்கர்களுக்கும் சர்வியர்களு- (Servians) க்கும் நேர்வதாக இருந்த கலகத்தை அடக்கினர்.

1862 - ஆம் வருஷம் அக்டோபர் மாதம் முதல்தேதியன்று அங்கில ஸ்தானாதிபதிகளுக்கு இரண்டாம் காரியதரிசியாகவும், 1863 - ஆம் வருஷம் ஜனுவரி மாதம் 16 - ஆந் தேதியன்று கான்ஸ்தாந்திநோபிலில் ஸ்தானாதிபதிக்கு முதற் காரியதரிசியாகவும், 1872 - ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 5-ஆந் தேதி பாரிஸ் நகரில் ஸ்தானாதிபதிக்குக் காரியதரிசியாகவும் நியமனம் பெற்று, மிக்க திறமையுடன் தம் காரியங்களை நிகழ்த்திக் கீர்த்திபெற்று விளங்கினர்.

விட்டன் பிரபு, முதல் முதல் செய்த கவி, அவரது இருபத்து நான்காம் வயதில் வெளியிடப்பெற்றது. அக்கவியின்திறத்தை அறிந்து புலவர் அனைவரும் அவரைப் புகழ்ந்துபேசினர். அதனல், அவர் பெரும்புலவர் என்பது வெளி-

யாயிற்று. பின்னர், அவர் வினோதக் கதைகள், வசன காவியங்கள், செய்யுட்கள், நாடகங்கள் முதலிய பற்பல நூல்கள் எழுதி வெளியிட்டனர். அச்சிடாமல் இருந்த சிற் சில நூல்களும், 1874-ஆம் யாண்டில் அச்சேறி வெளிவந்தன.

விட்டன் பிரபு, 1874-ஆம்வருஷம் டிஸெம்பர் மாதம் லிஸ்பன் (Lisbon) நகரத்திற்கு ஸ்தானாதிபதியாக நியமனம் பெற்றார். அப்போது இச் சென்னை மாகாணத்துக்குக் கவர்னராயிருந்த ஹபர்ட்பிரபு (Lord Hobart) காலகதி யடையவே, அந்த ஸ்தானத்தை மேற்கொள்ளும்படி துரைத்தனத்தார் விட்டன் பிரபுவைக் கேட்டதற்கு, அவர், முடியாது என்று மறுத்துவிட்டார்.

1875-ஆம் வருஷம் நார்த்ப்ரூக் பிரபு (Lord Northbrook) கவர்னர்ஜெனரல் உத்தியோகத்திலிருந்து தம் நாட்டிற்குத் திரும்பிப் போனபோது, விட்டன் பிரபு, அந்தப் பதவி பெற்று இந்தியாவுக்கு வந்து, இன்சொல்லும், தாழ்நடையும், காட்சிக்கு எளிமையும் உள்ளவராய், முறை தவறாமல் அரசுசெலுத்தி வந்தார்.

அக்காலத்தே இச்சென்னை மாகாணத்தில் நேரிட்ட பெருங் கருப்பினால் குடிகள்வருந்துவதைக் கேள்வியுற்ற விட்டன் பிரபு, இவ்விடத்திற்கு விஜயஞ் செய்து, கவர்னர் மாளிகையில் தங்கி, பெருந்தகையாளர் பலரைக் கண்டுபேசி, ஒரு முடிவுக்கு வந்தனர். அம் முடிவை, அக்

காலத்தில் சென்னைக் கவர்னராயிருந்த பக்கிங்காம் பிரபு (Lord Buckingham) வுக்கு வெளியிட்டுச் சென்றனர். அதன் பயனாகவே 'பக்கிங்காம் கால்வாய்' வெட்டப்பட்டது; இந்தக் கால்வாய் கடலூரிலிருந்து கோதாவரி ஜில்லா வரையில் சுமார் 250 மைல் நீண்டு செல்கின்றது. இது, சென்னையில் அடையாறு, கூவம் என்னும் ஆறுகளில் கலக்கிறது.

தாது வருஷத்துக் கருப்பில் மக்கள் பட்ட பாட்டை எண்ணி, துரைத்தனச் செலவில் பக்கிங்காம் பிரபுவினால் வெட்டப்பட்ட காரணம் பற்றி, இதற்கு, 'பக்கிங்காம் கால்வாய்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. இதன் மூலமாகப் படகுகளில் மாந்தர் போக்குவரவு செய்யவும், வர்த்தகப் பொருள்களைக் கொண்டு செல்லவும் வசதி ஏற்பட்டிருக்கிறது.


11. கல்யானை

உடல்வன்மையிலும், உருவத்திலும் யானைக்கு அடுத்தபடியில் உள்ளது கல்யானையே. அது, சற்றேறக் குறைய யானையின் அளவாகவே யிருக்கும்; சுமார் பத்துப் பன்னிரண்டு அடி நீளமும், ஐந்து ஆறு அடி உயரமும் உள்ளது. கல்யானையின் கால் குட்டையானது. அதன்

மூக்கின் மேற்புறத்தில் கொம்பு ஒன்று உண்டு. மேலுதடு நீண்டு குவிந்திருப்பதனால், அஃது இரையைச் சேர்த்துத் திரட்டி, வாயில்போட்டுக்கொள்ள அனுகூலமா யிருக்கிறது. அதன் உடம்பில் உரோமக் கவசம் இல்லை; பர்மாவிலுள்ள கல்யானைக்குக் காதில்மட்டும் மயிர் அடர்ந்திருக்கும். கால்களின் மேற்புறத்தில்—தொடைப்பக்கத்தில்—தோல் மடிந்து படிந்து தொங்கும். தோல், கபிலநிறம் வாய்ந்தது. அது, முதுகிலும் பக்கங்களிலும் இரண்டு அங்குலம் கனமுள்ளது. அவ்வுறுதியான தோல், சிங்கம் முதலியவற்றின் உகிர்களுக்கும் அசைவதில்லை. ஆதலால், கல்யானையைக் கண்டால் அஞ்சி ஓடாத விலங்கு ஏதும் இல்லை என்னலாம்.

கல்யானையின் கொம்பு சுமார் மூன்று அடி நீளம் இருக்கும். அஃது எலும்பினின்றும் முளைக்காமல், தோலினின்றும் தோன்றுகிறது. இட்டிபோன்ற அவ் வுறுப்பு அமைந்திருப்பதனால், அது, சிங்கம் புலி முதலிய விலங்குகளையும் சட்டை செய்வதில்லை. சில கல்யானைகளுக்கு இரண்டு கொம்புகள் இருப்பதுண்டு; அதனைப் படத்திற் பார்க்கலாம்.

கல்யானை—ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களிலுள்ள சதுப்பு நிலமான பெருங்காடுகளில் வாழும். அது, யானை சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் திரிந்து வாழும் காடுகளில் சாதாரணமாக வசிக்கும்.



இலை தழை முதலியவை, கல்யானைக்குச் சிறந்த உணவு. சில சமயங்களில் அது முதலையைப் பற்றித் தின்பதும் உண்டு. எந்த விலங்கும் புசிக்கமுடியாத முட்செடிகளையும் கல்யானை பிடுங்கி இன்பமாகத் தின்னும்.

கல்யானை இயல்பில் எதற்கும் தீங்கு செய்வதில்லை; ஏதேனும் ஒரு விலங்கு தன்னை எதிர்க்க வருமாயின், அதனைக் கண்டு அஞ்சி ஓடாமல், வீராவேசங்கொண்டு எதிர்த்துநிற்கும்.

கல்யானையைப் பிடிப்பது அதிக கஷ்டமான காரியம். அது, திரியவும் தங்கவும் ஏற்றதான சதுப்பு நிலத்தில், கன்றோடு உலவுங் காலம் பார்த்து, தாயைமட்டும் குண்டுவைத்துச் சுட்டுக் கொன்றுவிட்டு, கன்றைப் பிடித்து வளர்த்துப் பழக்குவர். அதன் தோல் துப்பாக்கிக் குண்டுக்கே யன்றி, மற்றெதற்கும் அசையாது.

கல்யானையைப் பிடிக்க வேட்டையாடுவது எளிதான செயலன்று; எவ்வளவு முயன்றாலும், அதனைப் பிடிக்க இயலாது. அஃது ஓடத் தலைப்பட்டால், அதைப் பின்பற்றிப் பிடிக்க எவராலும் ஆகாது. அது, பந்தயக் குதிரையினும் விரைவாக ஓடவல்லது. பெரிய முட்புதர்களை யெல்லாம் எளிதில் தாவித் தாண்டிச் செல்லும். எவ்வளவு அடித்தாலும், அதன் உடம்பில் உறைப்பதில்லை. வெடிகுண்டுகள் உடலில் தைத்தாலும், அது சட்டைசெய்யாது. தொடைகளின் மேற்புறம், இருதயம் முதலிய

இடங்களில் குண்டு பட்டால்மட்டுமே அது துடிதுடித்து அலறும்.

கல்யானே மாந்தரைக் கண்டால் கடுஞ்சினங்கொண்டு, துரத்திக்கொண்டு ஓடிவரும். ஒருவன் தப்பித்துக்கொள்ள எண்ணி, ஓடி ஒரு மரத்தில் ஏறிக்கொண்டால், கல்யானே அவனை விடாமல் தொடர்ந்து ஓடி, அவன் ஏறியுள்ள மரத்தை அடியோடு பெயர்த்துத் தள்ளி, அவனைக் குத்திக் கொலைபுரியுங் குணமுள்ளது.

இத்தகைய விலங்கையும் வருத்தி வதைக்க வல்ல சிற்றுயிர்களும் உண்டு. இ முதலிய பூச்சிகள், மடிந்துள்ள தோலுக்குள் புகுந்து தொளைத்து, உள்ளே செல்லும்; அதனால், கல்யானைக்கு அதிக உபத்திரவம் உண்டாகும். ஆதலால், கல்யானே பகற் காலத்தில் சேற்றுநீரில் இறங்கி, அச் சேற்றை உடல் முழுதும் பூசிக்கொள்ளும். அப்போது, தோலுக்குள் சென்ற பூச்சிகள் மூச்சுவிட முடியாமல் திணறி இறந்துவிடும். 'கல்யானைப் பறவை' என்று ஒரு சிறு குருவியுண்டு. அது கல்யானையின் முதுகில் தங்கி, உடலெங்கும் நடந்துதிரியும்; அப்போது கல்யானே சும்மா இருந்துவிடும். அப் பறவை, கல்யானையின் உடலில் தங்கியிருக்கும் புழு, பூச்சிகளைப் பற்றித் தின்று, அதற்கு உதவி செய்கிறது; தானும் பிழைக்கிறது.

12. மாந்தரும், மற்றைய உயிர்களும்

மாந்தர்களுள் அறிவிற் சிறந்தோரும் கண்டு வியக்கத் தக்க விசித்திரமான காரியங்களை, விலங்கு பறவை நீர்வாழ்வன முதலிய உயிர்கள் செய்து வருகின்றன. ஆயினும், மாந்தருக்கும் மற்ற உயிர்களுக்கும் ஏற்பட்டுள்ள வேற்றுமையோ மிகப் பெரிது. மாந்தர் தாம் செய்யும் செய்கைகளிலெல்லாம் பகுத்தறிவைத் துணையாகக் கொள்கின்றனர். மற்றைய உயிர்களோ தமக்கு ஏற்பட்டுள்ள இயற்கை யறிவையே பெருந் துணையாகக் கொண்டு வாழ்கின்றன. இஃது ஒன்றே மாந்தருக்கும் மற்றைய உயிர்களுக்கும் ஏற்பட்டுள்ள முக்கிய பேதமாம்.

முதலாவது: ஒரு மனிதன் நாகரிகம் ஒரு சிறிதும் அடையப்பெறாமல், அறியாமையாகிய கீழ்நிலையில் இருப்பதாகவைத்துக்கொள்வோம். அவனும் தன் உணவு முதலியவற்றைத் தேட வேண்டியவனாவான்; அதன்பொருட்டு அவன், தனக்கு வேண்டிய கருவிகள் முதலிய துணைப்பொருள்களைத் தேடவேண்டியவன் ஆகின்றான். அன்றியும், அங்கங்கே உண்டாகும் குளிர்ச்சி, சூடு முதலிய நிலைகளைத் தாங்கிக் கொள்ளப் போர்வையையும் தேடவேண்டிய அவசியம் ஏற்படும்; அதனால், அவ் வுடைகளைச் செய்துகொள்வதற்கு வேண்டிய கருவிகளையும் தேடவேண்டியவன் ஆவான். தனக்குக் கிடைத்த

உணவுப் பொருள்களைச் சமைத்துப் புசிக்க, அவன் முதலில் நெருப்பைத் தேடவேண்டும்; சமைப்பதற்கு வேண்டிய தட்டு முட்டுக்களையும் நாடவேண்டும். பின்பு, தான் குடியிருப்பதற்கு வேண்டிய இடத்தையும் அமைத்துக்கொள்ள முயல வேண்டும். மற்ற உயிர்களோவெனின், தமக்குக் கிடைத்த உணவைக் கிடைத்தவாறே தின்கின்றன. அவற்றிற்கு, இயற்கையான போர்வையும் அமைந்துள்ளது; தாம் உணவைச் சமைத்து உண்ணவேண்டிய அவசியம் இல்லை.

இரண்டாவது: மனிதன் செய்யும் செயல்களிலெல்லாம் அடிக்கடி பிழைகள் நேரிடக்கூடும்; ஏனைய உயிர்கள் மறந்தும் பிழை செய்வதில்லை. எந்தப் பறவையாவது தான் கட்டி முடிக்கக் கருதும் ஒரு கூடு நிறைவேறுவதற்குமுன், ஒரு மரக்கிளையில் உட்கார்ந்து, 'இதை இப்படிச் செய்தோம்; அதை அப்படிச் செய்தோம்; இதை இப்படிச் செய்தால் சரியாகும்; அதை அப்படிக் கொண்டுபோக வேண்டும்' என்று எண்ணிச்செய்வதை எவரும் கண்டதில்லை. பறவை முதலிய உயிர்கள், தாம் செய்ய நினைக்குஞ் செயல்களை எண்ணிப்பாராமலும், தவறிப் போகாமலும் செய்து முடிக்கின்றன. தேனீக்கள் தம் வேலையைச் செய்து முடிக்கும்போது ஒவ்வொன்றும் ஒவ்வோர் எண்ணங் கொள்ளுவதில்லை; அவற்றுக்குள் மாறுபாடான கருத்தும் ஏற்படுவதில்லை. சிற்ப

சாஸ்திர பண்டிதரோ, ஒரு கட்டடத்தைக் கட்டி-முடிக்க வேண்டுமானால், எத்தனையோ வகையில் ஆராய்ந்து பார்ப்பர்: தம்மைப் போன்ற பிற-ரையுங் கேட்பர். எத்தனையோ தரைப்படங்கள் (Plans) வரைவர். இத் தொல்லைக ளெல்லாம் அச் சிற்றுயிர்களாகிய தேனீக்களுக்கு இல்-லையே! ஆயுர்வேத பண்டிதர் ஓர் ஓஷதியின் குணாகுணத்தை அறிவதற்கு அல்லும் பகலும் ஆராய்ந்து, உண்மை கண்டறியக் கூடாமல், அதனைக் கைவிடுகின்றனர். ஒரு பொருளின் நன்மையையேனும் தீமையையேனும் கண்டு உணரவேண்டுமானால், மாந்தர்களுக்கு நெடுங் கால ஆராய்ச்சியும் அனுபவமும் வேண்டும். ஏனைய உயிர்களுக்கோ, இளமைப் பருவத்தி-லேயே தமக்கு வேண்டியவை, வேண்டாதவை என்னும் உணர்ச்சியும், பகை நட்பு என்னும் வேற்றுமையும் உண்டாய்விடுகின்றன. பூனை-யைக் கண்டால், அஞ்சி ஓடவேண்டும் என்று எலிக்குக் கற்பித்தவர் யாவர்?

மூன்றாவது: மானிடன் தான் செய்யும் எல்லாத் தொழில்களிலும் நாளும் விருத்தி யடைகின்றான்; மற்றை உயிர்கள் அவ்வாறு விருத்தி யடைவதில்லை. ஆயிரம் யாண்டுக்கு முன்னே இருந்த சிலந்தி கட்டிய கூட்டுக்கும், இப்போதிருக்கும் சிலந்தி கட்டுங் கூட்டுக்கும் வேற்றுமை ஒரு சிறிதும் இல்லையே! மாந்தர் ஆயிரம் யாண்டுக்குமுன் கட்டிய வீட்டிற்கும்

இப்போது கட்டும் வீட்டுக்கும் எத்துணை மாறுபாடுகள் காண்கின்றன. மாந்தர், தம் பகுத்தறிவைக்கொண்டு எல்லாச் செயல்களிலும் தலையிடுகின்றனர். அப் பகுத்தறிவு நெடுங்கால அனுபவம் முதலியவற்றால் விளக்கம் பெறும். அந்த அனுபவம் முதிர முதிரப் பகுத்தறிவு முதிரும்; பகுத்தறிவு முதிரவே, மாந்தர் செய்யும் செயல்களும் முற்றுப்பெற்றுச் சிறப்படையும்.

மேலே கூறிய இம்மூன்று வகைப்பட்ட வேற்றுமைகளே மாந்தர்க்கும் மற்றைய உயிர்களுக்கும் ஏற்பட்டுள்ள முக்கியமான வேற்றுமைகள் என்னலாம். அதனால்தான், 'அரிது அரிது, மானுடராதல் அரிது' என அவ்வையாரும் அருளியிருக்கின்றனர்.

13. வாலில்லாக் குரங்கு

இவ் வுலகத்தி லுள்ள உயிர்த்தொகைகளுள் பெரும்பாலும் மனிதனை ஒத்திருக்கும் உயிர் குரங்கேயாம். குரங்கின் திருந்திய வடிவமே மானிட வடிவமாயிற்று என டார்வின் (Darwin) என்னும் புலவர் கூறுகின்றனர். குரங்குகள் பலவகைப்படும்; அவற்றுள் வாலில்லாக் குரங்கும் ஒன்று.



வாலில்லாக் குரங்கு, காட்டு மனிதன் எனப் பெயர் பெறும். அஃது ஐந்தடி உயரம் உள்ளது; பழக்கினால், மனிதரைப் போலவே எல்லாச் செயல்களையும் செய்ய வல்லது.

மானுடக் குரங்கின் உடலின் மயிர், நீலங் கலந்த செம்மைநிறம் ஆனது; சிலவற்றிற்குக் கன்னங்கறேலென் றிருக்கும்; முதுகு, தோள், கைகால்களின் பின்புறம் இவ்விடங்களி லெல்லாம் மயிர் அடர்ந்திருக்கும். மனிதர்க்கு இருப்பதுபோலவே மானிடக் குரங்குக்கும் மீசையும் தாடியும் உண்டு; முகத்தில்மட்டும் மயிரில்லை. உள்ளங்கையும், உள்ளங்காலும் செம்புநிறமாயிருக்கும். அதன் உடல் திரைத்து விகாரமாய்த் தோன்றும்; உதடுகள் சிறுத்து மென்மையா யிருக்கும்; மோவாய், நீண்டு இருப்பதில்லை; கைகள் மிகவும் நீண்டு முழங்கால் வரையில் தொங்கும். கை நீளமான மனிதனை, 'ஆஜாநுபாஹு' என்று சொல்லுவது வழக்கம்; சிலர் அதனைப் பரியாசமாகக் கொண்டு, 'அவன் குரங்கைப் போன்றவனே!' என்று கூறுவர்.

வாலில்லாக் குரங்குகளுக்குப் பிறப்பிடம் சுமத்ரா, போர்னியோ என்னுந் தீவுகளாம். அத் தீவுகளில் பெரு மரங்கள் அடர்ந்திருப்பதனால், அவை, குரங்குகள் குடியிருக்க ஏற்றவையா யுள்ளன. நமது நாட்டிலுள்ள ஆல், அரசு முதலிய மரங்கள் போன்ற மிகப் பெரிய மரங்கள் அங்கே அடர்ந்துள்ளன. மனிதக்

குரங்குகள் ஒரு மரத்தினின்று மற்றொரு மரத்துக்குத் தாவிக் குதிக்கும்; அம் மரங்களிலுள்ள பழங்களைப் பறித்துத் தின்னும்.

மனிதக் குரங்குகளைப் பிடித்து, இரை தந்து, தக்கவாறு பழக்கினால், அவை நமக்கு உண்மையாக ஊழியஞ்செய்யும்; நெல் குற்றும், மாவரைக்கும், தண்ணீர் கொண்டு வரும். குடத்தைத் தலையில் வைத்து, தூக்கிக்கொண்டு வருகையில் வாயிற்படி இடிப்பதாயிருந்தாலும், அக்குடம் கீழே விழுந்து உடைந்துபோவதாயிருந்தாலும், அச் செய்தியைத் தன் எஜமானனுக்குக் கூச்சலிட்டுத் தெரிவிக்கும். அவை சுறுசுறுப்பும், உடல் வன்மையும் உள்ளவை. கப்பல் ஓடிக்கொண்டேயிருக்கும் பொழுது, பாய்மரம் முதலியவற்றின்மேல் ஏறிப்போய், சொன்னபடியே தொழில்களைச் செய்து முடிக்கும். மனிதக் குரங்கைப் பற்றிய வரலாறு பல உண்டு; அவற்றுள் ஒன்று கூறுவோம்:

ஜாவா என்னுந் தீவில் ஒரு குரங்கை ஒரு மூங்கிற் கூட்டில் அடைத்துக் கப்பலில் ஏற்றினர். அது, கூட்டிற் சிறைப்பட்டதைக் கண்டு, அக் கூட்டின் கழிகளைப் பிடித்து அசைத்து அசைத்து, முறிக்க முயன்றது. அவ்வாறே பலவற்றையும் அசைத்துப் பார்த்தும், அவற்றை முறிக்க முடியாதெனக் கண்டு, ஒவ்வொன்றையும் தனித்தனியே அசைத்துப் பார்த்தது. அவற்றுள் ஒரு கழி மற்றவைகளை-

விட மிகவும் நுண்ணியதா யிருந்ததைக் கண்டு, அதையே உறுதியாகப் பிடித்துப் பல முறை அசைத்து ஆட்டி, முறித்து விட்டு, வெளியே வந்துவிட்டது. பிறகு, எவரும் அதைத் தடுக்காமல் அதன் இஷ்டப்படியே கப்பலெங்கும் திரிய விட்டனர். விடுபட்ட குரங்கு, கப்பற் கயிறுகளைப் பிடித்து ஊசலாடிக்கொண்டும், அங்கிருந்த சிறுவரோடு விளையாடிக்கொண்டும் திரிந்தது. அது, சில பிள்ளைகளைத் தட்டிக் கொடுத்தது: பின்னர், அவர்கள் தன்னைத் தொடர்ந்து ஓடிவரத் தூண்டிவிட்டு ஓடிற்றும்.

மனிதக் குரங்கு எவனையேனும் எதிர்க்குமாயின், முதலில் அவனைக் கீழே தள்ளிவிடும்; பிறகு தன் கை கால்களால் அவனை அழுத்திக் கொண்டு, பல்லினால் கடிக்கும். அதற்குச் சினம் உண்டாகும்போது, தன் காலைத் தரையில் தேய்த்துக்கொண்டு, பல்லைக் காட்டி இளிக்கும்; அண்டையி லுள்ளவர்களைக் கடிப்பதும் உண்டு.

14. அலெக்சாந்தர்

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள கிரீஸ் (Greece) தேசத்தின் வடக்கில் மாஸிடோனியா (Macedonia) என்னும் நாடு ஒன்று உண்டு. அதனைப் பிலிப் (Philip) என்னும் மன்னர் பெருமான்



ஆண்டு வந்தனன். அவனுக்கு நற் புதல்வன் ஒருவன் பிறந்தான்; அவன் பெயர் அலெக்சாந்தர் என்பது.

அலெக்சாந்தர் சிறு வயதிலேயே உடல்வன்மை பெற்றுப் பேராண்மையுற்று விளங்கினன். அவன் வளர்ந்து வாலிபனு யிருக்கையில், தன் தந்தை அயல்நாடுகள் பலவற்றை வெற்றிகொண்டு வருவதை யறிந்து, பெரிதும் மனம் வருந்தினன். அவனுடைய நண்பருட் சிலர் அலெக்சாந்தரை நோக்கி, 'நண்ப, ஏன் துயருறுகின்ருய்? தந்தை வெற்றிகொள்வதைக் கேட்டு மகிழ்ச்சியடைவதைவிட்டு, வருந்துவதும் உண்டோ?' என்றனர். அதற்குஅலெக்சாந்தர், 'அன்பர்களே, நான் ஏன் மகிழ்ச்சியடையவில்லை, ஏன் வருந்துகின்றேன் தெரியுமா? என் தந்தை, நான் போர் புரிந்து வெற்றி பெற்று, வீரத்தைக் காட்டுவதற்கு ஒரு நாடும் விட்டுவைக்கவில்லையே என்பதனல்தான் மிக வருந்துகின்றேன்' என்று கூறினன்.

மாணக்கர்களே, இச் சிறுவனது மனப்பான்மை எப்படியிருந்தது என்பதை எண்ணிப் பாருங்கள்! அவனன்றே சிறந்த புதல்வன்! அவனன்றே வீரன்! சிறு வயதில் சிறந்த எண்ணங்கள் மனத்தில் தோன்றவேண்டும்; பின்னர், அவற்றை முடிக்க முயலவேண்டும்.

அரிஸ்தோத்தல் (Aristotle) என்னும் கிரேக்கப் புலவர் அக் காலத்திலிருந்த அரிய

நூல்களை யெல்லாம் அவனுக்குத் தெளிவுறக் கற்பித்து வந்தனர்; அரசியல் முறைகளையும், வில் வாள் முதலிய கருவிப் பயிற்சிகளையும் அவனுக்கு நன்கு உணர்த்தினர்.

ஹோமர் (Homer) என்னும் புலவர் பெருமான் எழுதிய இலியட் (Iliad) என்னும் கிரேக்கச் செய்யுள் நூல் ஒன்று அவனுக்கு அருமையாகக் கிடைத்தது. அலெக்சாந்தர் நாள்தோறும் அந் நூலின் ஒரு பகுதியைப் படித்து முடிக்காமல், படுக்கப் போவதில்லை. இவ்வாறு அவன் மனவன்மையும் உடல் வன்மையும் பெற்று, பதினாறு வயதுள்ள இளங்குமரனாய் விளங்கினான்.

அப்போது பிலிப் அரசனிடம் வர்த்தகன் ஒருவன் அழகிய குதிரையொன்றைக்கொண்டுவந்தான். அது முரட்டுத்தனம் வாய்ந்தது; ஒருவருக்கும் அடங்காதது; கண்டோர் எவரும் அதன் அருகிற்செல்லவும் அஞ்சினர். ஆகவே, அதனை அடக்கிப் பிடித்து ஏறிச் செலுத்துவோர் அங்கு எவரும் இலர். பிலிப் அரசன், 'என்ன செய்வது!' என்று ஏங்கியிருந்தான்.

அலெக்சாந்தரோ குதித்து ஓடிவந்து, தந்தையையணுகி, 'இதனை நான் ஏறிச்செலுத்துகிறேன்; ஒரு சிறிதும் அஞ்சேன்!' என்று வீரம் பேசினான். தந்தை புன்னகை கொண்டு, அவன் காட்டிய வீரத்தை வியந்து, 'செல்வச் சிறுவ, உன்னால் ஆகாது; நீயோ சின்னஞ்

சிறுவன்; குதிரையோ கொடியது; முரட்டுத் தனம் வாய்ந்தது' என்றான். தன்மகன் தன்னை ஏற விடும்படி வருந்தி வருந்திக்கேட்டுக்கொண்டதனால், தந்தை ஒருவாறுஉள்ளந்துணிந்து, 'சரி அப்படியே செய்' என்று ஒப்புக்கொண்டான்.

உடனே அலெக்சாந்தர் அக் குதிரையைக் குறுகி, அதன் கழுத்தின்மேல் தடவித் தட்டிக் கொடுத்து, அதன் கண்ணுக்குத் தன் நிழல் புலப்படாதபடி, அதன் முகத்தைச் சூரியனுக்கு எதிராகத் திருப்பி நிறுத்திக்கொண்டு, அதன் மேல் பாய்ந்தேறிச் செலுத்தினன். அதைக் கண்டு அங்குச் சூழ்ந்துநின்றோர் அனைவரும், 'என்னே, என்னே! இவ்விளவரசர் கதி!' என்று வியந்து கூறிப் பார்த்து நின்றனர். குதிரையோ குமரனைக் கண்ணுக்கு எட்டாத தூரம் கொண்டுபோய்விட்டது. 'பிள்ளை போய்-விட்டதே! போய் விட்டதே!' என்று அங்கு நின்றவர் அனைவரும் அலறிக் கூவிக்கொண்டிருந்தனர்.

நெடுநேரத்துக்குப் பின், வெகு தூரத்தில் குதிரை திரும்பி வருவதைக் கண்டு அனைவரும் வியப்புக் கொண்டு, ஆவலுடன் எதிர்நோக்கி நின்றனர். அலெக்சாந்தரோ, குதிரையைத் தந்தைமுன் கொண்டுவந்து நிறுத்தி, குதித்து இறங்கினன். தந்தை, தன் புதல்வனைத் தழுவி, மார்போடணைத்து, மாறி மாறி முத்தமிட்டு, மகிழ்ச்சி அடைந்தான்; குதிரையோ வேர்த்து

விதிர்விதிர்த்து, வாயில் நுரைதள்ளச் சோர்ந்து நின்றுவிட்டது. அங்கு நின்றோர் அனைவரும் சிறுவனை மனமார வாழ்த்தி மகிழ்ந்தனர்.

பின்னர், அக் குதிரையே அலெக்சாந்தருக்குச் சிறந்த வாகனமாயிற்று. அலெக்சாந்தர் அதன்மீது ஏறி, இவ்வுலகை ஒரு குடைக்குள் அடக்கி யாள எண்ணினான். அவன் புரிந்த போர்களிலெல்லாம் அக்குதிரையே அவனுக்குத் துணையா யிருந்தது.

பிலிப் அரசன் வன்கொலையால் மடிந்தபோது, அலெக்சாந்தருக்கு வயது இருபது. இவ்விளவயதில் அலெக்சாந்தர் தன் தந்தைக்குப் பதிலாகப் பட்டந் தரித்து, அடுத்துள்ள நாடுகளையும் பெர்ஷியா (Persia) நாட்டையும் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டான்.


பிறகு, நமது இந்துதேசத்து வடமேற்கிலுள்ள பஞ்சாப் வரையில்வந்து, அரியவீரனாய் விளங்கினமையால், அவனுக்கு 'மகா அலெக்சாந்தர்' என்னும் பட்டத்தோடுகூடிய பெயர் வழங்கலாயிற்று. அவன் இந்தியாவுக்கு வந்தபோது, அரிய வீரச் செய்கைகள் பலவற்றைக் காட்டினான். அதனால்தான், அவன் சிறந்த வீரனாக விளங்கிச் சிறப்புப் பட்டம் பெற்றான். அவனைப்பற்றிய வரலாறுகள் பல வழங்குகின்றன.

15. மகா அலெக்சாந்தரும், மகாவீரனும்

மாஸிடோனியா (Macedonia) நாட்டிற்கு வடக்கில், கருங்கடலுக்கு மேற்கில் திரேஸியா (Thracia) என்னும் மலைநாடு ஒன்று உண்டு. அந்நாட்டை அடிப்படுத்தி, அதனையும் அலெக்சாந்தர் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டான். திரேஸியா நாட்டில் கள்வர்களுக்குத் தலைவனான வீரன் ஒருவன் இருந்தான். அவன் காடுகளில் மறைவிருந்து, அவ்வப்போது திரேஸியா நாட்டிற் புகுந்து கொள்ளையடித்து, குடிகளை வருத்தி, ஊர்களை யெரித்து, கொடுமைகள் பல புரிந்து வந்தான். அச் செய்தியைக் குடிகள் அலெக்சாந்தரிடம் முறையிட்டுக் கொண்டனர்.

அலெக்சாந்தர் தன் படைத்தலைவர்களைப் படைகளோடு அனுப்பி, அக் கள்வர் தலைவனைக் கையோடு பிடித்துவரும்படி கட்டளையிட்டான். படைத்தலைவர்கள் சென்று என்ன பாடுபட்டும், அவனைப் பிடித்துவர இயலாமற் போயிற்று. அதுகண்டு அலெக்சாந்தர், தானே தன் படைகளையும் படைத் தலைவர்களையும் கூட்டிக்கொண்டு போய், கள்வர் தலைவன் தங்கியிருந்த அக் காட்டகத்தை யடைந்து, ' அக் கள்வனை ஒரே பிடியாகப் பிடித்து வருக,' என ஏவினன்.

படைத் தலைவர் சென்று, அக் கள்வனைப் பிடித்து, கையில் விலங்கிட்டுக் கொண்டுவந்து,



அலெக்சாந்தருக்கு முன்னே நிறுத்தினர். கள்வர்தலைவன் ஒரு சிறிதும் அச்சமற்றவனாய், அரசனை நோக்கி நிலைத்து நின்றான். அலெக்சாந்தர் கள்ளன் நிற்கும் நிலையையும், கடுஞ்சினங் கொண்ட முகத்தையும் கண்டு வியப்புக் கொண்டு, அவனை நோக்கி, வினவுவா னானன்;

அலெக்சாந்தர் : அடா கிரேஸிய நாட்டுக் கள்வா, நீ செய்துவரும் தீமைகளைப் பற்றிப் பெரிதும் கேள்விப்படுகிறேன்; அவை யனைத்தும் உண்மையா?

கள்வன் : நான் கிரேஸிய நாட்டினன் என்பது உண்மையே; கள்வன் என்பது உண்மை அல்ல; எதற்கும் அஞ்சாத படைவீரன் நான்.

அலெக்சாந்தர் : படைவீரனா! நீ ஒரு கள்வன்; கொள்ளைக்காரன்; உயிர்வதை செய்யும் கொடும்பாவி; ஆயினும், ஒன்றுக்கும் அஞ்சாத உன் உள்ளத்தை நான் நன்கு மதிக்கின்றேன்: உன் கொடிய செயலைமட்டும் அறவே வெறுக்கின்றேன்; அதன்பொருட்டு உன்னை அடக்குதல் வேண்டுமன்றோ? என்ன சொல்லுகின்றாய்?

கள்வன் : நீர் இவ்வளவு இரைந்து பேசுவதற்கு யான் ஒரு சிறிதும் அஞ்சேன்; நான் செய்த தீமைதான் என்ன?

அலெக்சாந்தார் : என் கட்டளையை மீறி நடந்ததே பெருங் குற்ற மன்றோ! குடிகளைக்

கலக்கி, அவர்கள் நடுநடுங்கும்படி நீ தீமை செய்யவில்லையா? அவர்கள் சொத்துக்களையும் கொள்ளைகொள்ள வில்லையா?

கள்வன் : அலெக்சாந்தர் என்னும் அரசரே, இப்போது நான் உமது கையில் அகப்பட்டுள்ள ஒரு குற்ற வாளியே; உமது பேச்சை நான் கேட்கவே வேண்டும்; நீர் இடும் கட்டளைக்கு உட்படவே வேண்டும்; ஆயினும், என் மனமோ உமக்கு அடங்கவில்லை. நீர் பேசும் பழிமொழிகளுக்கு யான் விடை கூறுவேனுயின் உமக்கு வருத்தம் உண்டாகும்.

அலெக்சாந்தர் : வருத்தமா, வாராது; விடை கூறு: என்னேடு பேசுவோர் வாயை யான் ஒருபோதும் அடக்கியதில்லை.

கள்வன் : அவ்வாருயின், நீர் கேட்ட கேள்விக்கு விடையாக நானும் ஒரு கேள்வி கேட்கிறேன்! நீர் உமது வாழ்நாளை எவ்வாறு கழித்திருக்கிறீர்?

அலெக்சாந்தர் : நான் ஒரு வீரனுகவே கழித்திருக்கின்றேன்! விஜயலக்ஷ்மியைக் கேள்: அவள் உனக்குத் தெரிவிப்பாள். வீரர்களுக்குள் வீரன் யான்; மன்னர்களுக்குள் மன்னன் யான்; வெற்றி வேந்தர்களுக்குள் வெற்றிவேந்தன் யானே.

கள்வன் : நீர் சொல்லியபடி விஜயலக்ஷ்மி என்னைக் குறித்தும் கூருளோ? என்னைப்போலும் வீரமுள்ள படைத்தலைவன் ஒருவன்

எக்காலத்திலேனும் இவ்வுலகில் இருந்தது உண்டோ! தற்புகழ்ச்சியாகப் பேச எனக்கு எண்ணமில்லை. என்னை எளிதில் வெல்வது அரிதென்பது உமக்கே தெரியுமே.

அலெக்சாந்தர்: நீ எவ்வளவு வீரனுயிருந்தாலும் என்ன, ஒரு கள்வன்தானே!

கள்வன்: நீர் மட்டும் வெற்றிவேந்தரோ? நீரும் இவ்வுலகமெங்கும் திரிந்தலேந்து, நாடுகளைக் கட்டியாளவேண்டும் என்னும் பேராசையால் குடிகளுடைய வாழ்வைக் குலைத்து, பயிர் பச்சைகளை யழித்து, முறையின்றிக் குடிகளைக் கொன்று, அவர்கள் பொருள்களைச் சூறையாடி, நாடு நகரங்களைப் பாழாக்கவில்லையா? நான் ஒரு சிறு கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு ஒரு சிற்றூரிற் புகுந்து தீமைகள் செய்தேன்; நீரோ, பெருஞ் சேனையோடு சேர்ந்து, பலப்பல நாடுகளுட் புகுந்து, பற்பல தீமைகள் செய்து வருகின்றீர். யான் ஒன்றியாய் வந்தவர்களைப் பிடித்துப் பறிமுதல் செய்தேன்; நீரோ மன்னர்களையும் மாந்தர்களையும் பிடித்து அவர்கள் நாடு நகரங்களைக் கைப்பற்றிக்கொண்டு நாசம் செய்கின்றீர். நான் சில சிற்றூர்களைத் தீக்கு இரையாக்கிப் பாழ் செய்தேன்; நீரோ மிக்க செழிப்பான நாடுகளையும் நகரங்களையும் அழித்துப் பாழாக்கி வருகின்றீர். நீர் ஒரு மன்னராகப் பிறந்ததனுலும், நான் ஒரு குடியானவனுகப் பிறந்ததனுலும், உமக்கும் எனக்கும்

வேற்றுமையுண்டாயிற்று. உற்று நோக்கினல், நீர் என்னைவிடப் பெரிய கள்வராவீரே!

அலெக்சாந்தர் : அப்படியா, நான் அரசனைப்போலவே போய், நாடுகளை வென்று மற்ருேர் அரசனுக்கு நன்கொடையாக நல்கியிருக்கிறேன்; நாடுகளை அழித்து அவற்றினும் பெரிய நாடுகளை உண்டாக்கி யிருக்கிறேன். கல்வி, வர்த்தகம், கலைஞானம் முதலியவற்றை நாடுகள்தோறும் பரவச் செய்திருக்கிறேனே!

கள்வன் : 'நானும் செல்வர்களிடத்தில் பறித்த பொருளை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கிறேன்; துஷ்டர்களாகிய கள்வர் கூட்டத்தில் நல்லொழுக்கம் பரவிவரச் செய்திருக்கின்றேன்; ஒடுக்கப்பட்டவர்களைப் பாதுகாத்திருக்கின்றேன். நீர் சொல்லும் கலைஞானங்களில் எனக்கும் கொஞ்சம் தெரியும்; ஆயினும், நீரும் நானும் இவ்வுலகத்தாருக்குச் செய்து வந்திருக்கிற தீமைகளை நீக்குவதற்கு உமக்கும் வன்மையில்லை, எனக்கும் வன்மையில்லை' என்று இறுமாந்து கூறினன்.

கள்வன் கூறிய கருத்துரைகளைக் கேட்ட அலெக்சாந்தர் நல்லுணர்ச்சி யடைந்தவனய், தன் அருகில் நின்ற அமைச்சர், படைத்தலைவர் முதலியோரை நோக்கி, 'நீவிர் இவனுக்கு இட்டிருக்கிற விலங்கைக் கழற்றி எறியுங்கள்; இவன் கால்யாப்பைத் தறித்து வீசுங்கள்' என்று சொல்லிவிட்டு, கள்வனை, நோக்கி, 'நீயும்

யானும் சரியொத்தவர்களா? அலெக்சாந்தரும் ஒரு கள்வன் தானே? என்பதைத்தான் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும்' என்றான்.

---

16. வாயு மண்டலம்

பூமியைச் சுற்றி நாற்புறமும் கருங்கடல் சூழ்ந்திருப்பதுபோல், இப் பூமியின் மேற்பரப்பில் எங்கும் வாயுமண்டலம் பரவி யிருக்கின்றது. கண்டங்கள், தீவுகள் முதலிய நிலப் பகுதிகளில் கடல்நீர் பரவியிருப்பதில்லை. வாயு மண்டலமோ அப்படிப் பட்டது அன்று. அது பரவியிராத இடமே இல்லை; நுழையாத இடமே இல்லை. அஃது இப் பூமி யெங்கும் பரவியுள்ள ஓர் அகண்ட வஸ்துவா யிருப்பினும், அது நம்முடைய பார்வைக்குப் புலப்படுவதில்லை. அது பூமியிலிருந்து சுமார் நாற்பது மைல் வரையில் உயரப் பரந்து விளங்குகின்றது. நாம் பார்க்கவேண்டிய பொருள் வெகு தொலைவில் இருந்தாலும், நமது பார்வை, வாயு மண்டலத்தை ஊடுருவிச் சென்று பார்க்கும்.

கடலில் மீன் முதலிய உயிர்கள் நீந்தித் திரிவதுபோல, வாயுமண்டலமாகிய பெருங்கடலில் பலவகையான பறவை முதலிய உயிர்கள் பறந்து செல்கின்றன. பலவகையான சிப்பிகள்

கடலின் அடியில் ஊர்வதுபோலவே, மாந்தர் முதலிய உயிர்கள் வாயுமண்டலத்தின் அடியில் வாழ்ந்திருக்கின்றன. பூமியைச் சூழ்ந்துள்ள வாயு, தண்ணீரைவிட மிகவும் எளிமையான பொருள் : கடலில் ஒவ்வொரு காலத்தில் அலை எழுவதும், மற்றொரு காலத்தில் அஃது அமைதி-யாவதும் நாம் அறிந்த செய்தி ; அதுபோலவே, வாயுவும் வீசியடிப்பதும், அமைந்து நிலையா-யிருப்பதும் நாம் அனுபவத்திற் காண்கின்றோம்.


வாயு இல்லாவிடில், ஓர் உயிரும் உலகில் பிழைத்திராது, ஒருசெடியும்முளையாது. நெருப்-பும் எரியாது, ஒளியும் பரவாது. ஒளி எங்கும் பரவுவதற்கும் வாயுவே முதற் காரணம்; வாயு இல்லாவிடில், நாம் பேசும் பேச்சுக்கும் இடியின் முழக்கத்திற்கும் ஏற்பட்டுள்ள மிக்கவேற்றுமை ஒருசிறிதும் ஏற்படாது; செவிப்புலன் அழிந்து ஒழிந்துபோம்.

நமது உடலில் ஒரு சதுர அங்குல அளவில், ஐந்து வீசைச் சுமையுள்ள பாரத்தை வாயு சுமத்துகின்றது. ஆதலின் நம் உடல் முழுதும் தாக்கும் சுமை நானூறுபார மாகும். உடலின் எப்புறத்தும் ஒரே சமமாய்த் தாக்குவதனால், அது நமக்குப் பெருஞ்சுமையாய்த் தோன்றுவ-தில்லை. வாயு அவ்வளவு பெரிய சுமையுள்ள பொருளாயினும், அதிக இலேசான இறகைப் பார்க்கிலும் இலேசானதாகக் காண்கின்றது. அவ்வளவு மென்மையானதாகக் காணும்

காற்றே, கப்பல்களைக் கடலில் செலுத்திக்கொண்டு போகவும், மலை முதலிய கற்பொருள்களை மண்ணாக்கவும் வல்லதா யிருக்கின்றது.

காற்று, கடுங் காற்றானல் — சுழல் காற்றானல், அதன் வன்மைக்கு அடங்கி அடிபடாத மலைகளும் காடுகளும் மாடங்களும் மதில்களும் உண்டோ? அது, கடலில், மலைபோல் அலையெழச் செய்யும்; கப்பல்கள் துண்டு துண்டாக உடைந்து சிதறிப் போகச் செய்யும். பூமி, பகலில் சூடு கொள்வதும், இரவில் குளிர்ந்து போவதும் வாயுவின் தன்மையினலேயே. கடல் முதலிய நீர்நிலைகளினின்றும் நீராவியை உண்டாக்கி, மேகமாக மாற்றி, மழை பெய்யச் செய்வதும் வாயுவின் தன்மையே. சூரியன் மறையும் மாலைவேளையில் அந்திவெளிச்சம் உண்டாவதற்குக் காரணம் வாயுவேயாம். உயிர்களின் உடலினின்று வெளிப்படும் கெட்ட வாயுவை நல்ல வாயுவாக மாற்றுவதும் வாயுவே. தீயை ஒளிவிட்டு விளங்கச் செய்வது போலவே, நம் உடலிலுள்ள உதராக்கினியை ஒளிரச் செய்வதும் வாயுவே.

பூமியின்மேல் வெளிச்சமும் சூடும் அளவு கடந்து பரவாதபடி வாயுமண்டலம் பூமியைக் கவிந்துகொண் டிருக்கிறது. வாயு இல்லாவிடில், உலகமே இல்லை யென்று சொல்லிவிடலாம்.



பார்லிமென்ட் சபா மண்டபம்

17. பார்லிமெண்ட்

இவ்வுலகிலுள்ள பற்பல ராஜாங்கங்களில் பிரிடிஷ் ராஜாங்கமே மிகச் சிறந்தது; அது, நல்ல சீர்திருத்தமும் நாகரிகமும் நல்லியல்பும் வாய்ந்தது. 'பிரிடிஷ் ராஜ்யத்தில் என்றும் சூரியன் அஸ்தமனம் ஆவதில்லை' என்னும் வாக்கியம் ஒன்று உலகில் வழங்குகிறது; இஃது ஒரு பெருஞ் சிறப்பே யன்றோ!


இந்த அங்கில துரைத்தனத்துக்கு முக்கிய ஆதாரமான நிபந்தனைகள் சில உள; அவை:

(1) ஒரே வம்சத்து அரசர்கள், பரம்பரையாய், தங்களுக்கு உரித்தான அதிகாரத்தைக்கொண்டு, செங்கோல் செலுத்தவேண்டும்;

(2) பார்லிமெண்ட் (Parliament) என்னும் ஜனப் பிரதிநிதி சபையாருடைய சம்மதமின்றி அவ்வரசர்கள் வரி ஏற்படுத்தவும், புதுச் சட்டங்கள் உண்டாக்கவும் கூடாது;

(3) ஒருவனுக்கு அநியாயமாக அபராதம் விதிக்கவும், ஒருவனைச் சிறை செய்யவும், ஒருவனுடைய பொருளையாவது சுதந்தரத்தையாவது அபகரிக்கவும், நியாயமான விசாரணை யில்லாமல் ஒருவனைத் தண்டிக்கவும் கூடாது;

(4) வழக்குக்களை விசாரித்தறிய நியாயாதிபதிகளுக்குத் துணையாக ஜூரி என்னும் மத்தியஸ்தரை ஏற்படுத்தியே விசாரணைகளை நடத்தவேண்டும்;



பார்லிமென்ட் கூடும் சபை.

(5) நியாயத்தை வலிந்து கற்பிக்கவும், வழக்கின் தீர்ப்பை விரைவிற் சொல்லாமல் வீணே காலங் கடத்தவும் கூடாது.

முக்கியமாக இவ் வைந்து வகையான கருமங்களை மேற்கொண்டுள்ள அங்கில துரைத்தனத்திற்கு அடிப்படையான ஆதாரமா யுள்ளது, பார்லிமென்ட் என்னும் பெரிய சபையே.

அந்த மகா சபையில் வரிசைக் கிரமமாய் வருகின்ற 731 பிரபுக்களும், அந்தந்த மாகாணத்து ஜனங்களால் தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்ட 615 ஜனப் பிரதிநிதிகளும் சேர்ந்திருக்கின்றனர். அந்தச் சபையாருடைய சம்மதம் இல்லாமல் அரசர் எந்தக் காரியத்தையும் தாமே செய்யச் சுவாதீனம் உடையவர் அல்லர்.

பார்லிமென்ட் சபையார் ஒருங்கு கூடிப் பேசுவதற்காகச் சபாமண்டபம் ஒன்று அழகாக அமைக்கப் பெற்றுளது. அவரவர்களுக்குள்ள அரிய திறமையையும், தேர்ச்சியையும், ஆராய்ச்சியையும் வெளியிட்டுப் பேசத்தக்க இடம் அதுவேயாம்.

அக் கட்டடம், எதிரொலி சிறிதும் இல்லாதது; ஒவ்வொருவர் பேசுவதும் மண்டபம் முழுதும் தெளிவாகக் கேட்கத்தக்கது.

அரசர் அமைச்சர் முதலியவர்களுக்கும், பார்லிமென்ட் நடவடிக்கைகளைப் பார்க்கவரும் பலருக்கும், அங்கே நடக்கும் சகல விஷயங்-

களையும் குறித்துக்கொள்ள வரும் பத்திராதிபர் முதலானவர்களுக்கும் ஏற்றவாறு இடங்கள் அமைக்கப்பட் டுள்ளன.


பார்லிமென்ட் சபையில்—மேற் சபை, கீழ்ச் சபை என இரண்டு பிரிவுகள் உண்டு. அவற்றுள், பிரபுக்கள் கூடுவது மேற்சபை (House of Lords); அதற்கு அரசரும் அரசியும் விஜயஞ்செய்வது வழக்கம். ஜனப்பிரதிநிதிகள் கூடுஞ் சபை கீழ்ச் சபை (House of Commons); அதில் நிகழ்த்தப்படும் உபந்நியாசங்களும், நடைபெறும் ஆலோசனைகளும் அதிக முக்கியமானவை யாகும்.

18. ஜட்கா வண்டிக் குதிரை

சென்னை நகரில், பல இடங்களிலும் ஜட்கா வண்டிகள் ஓடிக்கொண் டிருப்பதைப் பலரும் பார்த்திருப்பர். ஜட்கா வண்டியில் நாட்டுக் குதிரை யொன்றைப் பூட்டி, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ஓட்டிச்சென்று, கூலி வாங்குவது வண்டிக்காரர் வழக்கம். சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் இருந்த ஜட்கா வண்டியின் மாதிரி ஒரு விதம்; இப்போது வழங்கும் ஜட்கா வண்டியின் மாதிரி வேறு விதம்.

ஒரு ஜட்கா வண்டியில் நான்கு பேர்களே ஏறிச் செல்லவேண்டும். முற்காலத்து ஜட்கா-

வண்டி ஒரு சிறு பெட்டிவண்டி போன்றது. அதற்கு, பின்பக்கத்தில் ஒரு கதவு உண்டு. அந்த வண்டியில் நான்கு மனிதர் ஏறிப்போக வசதியான இடம் இருப்பதில்லை; முன்புறம் உயர்ந்தும், பின்புறம் தாழ்ந்தும் இருந்ததனுல் முன்புறத்தில் உட்காருவோர், நழுவி நழுவி,



பழையகாலத்து ஜட்கா வண்டி

பின்புறத்தில் உட்காருவோர்மேல் விழவேண்டி நேரிடும். இந்தக் காலத்து ஜட்கா வண்டியில் அப்படிப்பட்ட தொல்லை இல்லை. ஆனுல், முன்புறத்திலும் பின்புறத்திலும் திறந்தபடியே யிருப்பதனுல், வெயிலுக்கும் மழைக்கும் காத்-துக்கொள்ள வசதி ஏற்படுவதில்லை. அன்றியும்,

இதில் கால்களை மடக்கி உட்காரவேண்டியிருப்பதனல், கஷ்டம் அதிகம்.

ஜட்கா வண்டிக் குதிரைகள் படும் பாடு சொல்லத் தரமல்ல. அக் குதிரைகள், ஓய்வு இல்லாமல் ஓடிக்கொண்டே யிருக்கவேண்டும்; சவாரியில்லாத காலத்திலும் திரிந்துகொண்டே யிருக்கும். ஒரு வீட்டில் ஓயாது உழைத்துக்கொண்டே யிருப்பவன், 'ஜட்கா வண்டிக் குதிரைபோல் உழைக்கிறேனே!' என்பான். இதனல் இக் குதிரைகள் படும்பாடு இப்படிப் பட்டது என்பது நன்கு விளங்குமே!

வண்டிக்காரன், குதிரை ஓடும்பொழுதும், அது பின்னும் வேகமாக ஓடும்படி சவுக்கினல் மேலும் மேலும் அடிப்பான். இது நம் நாட்டில் சிறு வயதிலேயே உண்டாகுந் துர்க்குணம். பெற்றோர், சிறுவர்களுக்குக் குதிரை, மாடு முதலியவற்றை மரத்தினல் செய்து கொடுத்து, கையில் ஒரு சவுக்கும் கொடுப்பர். அவற்றை அச் சிறுவர் பெற்றுக்கொண்டு, ஓடாத மரக் குதிரையை ஓடும்படி அடிப்பர். அதனல் நாய், மாடு முதலிய உயிர்களைக் கண்டால், அவற்றை அடிக்கவேண்டும் என்னும் எண்ணம் சிறுவர் மனத்தில் உண்டாய்விடுகின்றது.

'நாய் காணிற் கற்காணு வாறு' என்னும் முதுரையும் இதனல்வழங்கலாயிற்று. ஜப்பான் தேசத்துச்சிறுவர் அனைவரும் உயிர்களிடத்து மிக்க அன்பு உள்ளவர்கள்; கல்லை எடுத்து

நாயின்மேல் எறிவதில்லை; அதனால், நாய் காணும்படி கல்லை எடுத்தாலும், அந் நாய் அஞ்சி ஓடுவதில்லை. ஜப்பானியர், மாட்டையும் குதிரையையும் அடிப்பதில்லை; அவற்றைத் தட்டிக் கொடுத்தே நடத்துவர். இவ்வகையான நற்குணம் நமக்கும் படிவது நன்மையன்றோ !

ஜட்கா வண்டிக் குதிரைகளுக்கு, நல்ல தீனியும் வைப்பதில்லை. அறுகங் கட்டையைச் செதுக்கிக் கொண்டுவந்து போடுவர்; சிறிது கொள்ளும் வைப்பர். அந்தக் கொள்ளை ஒரு சிறு கோணிப்பையிற் போட்டு, குதிரையின் வாயிற் கட்டிவிடுவர்; அது, மூச்சுவிடவும் முடியாமல் திகைத்துத் திகைத்து, அக் கொள்ளைத் தின்னும். குதிரை படுக்கவும் நல்ல இடங்கிடையாது; சாணி முதலிய அசுத்தங்களில் காலை நீட்டிக்கொண்டே நிற்கும். அதனால், அதன் காலில் வீக்கம் முதலிய நோய்கள் காண்பதும் உண்டு.

ஜட்கா வண்டிக்காரர் இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, ஏற்றவைகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமையால், 'உயிர்களுக்குத் தீமைசெய்வதை விலக்கும்சங்கத்தார்' (Society for the Prevention of Cruelty to Animals) ஏற்பட்டு, இவற்றையெல்லாம் கண்காணித்து வருகின்றனர். அவர்கள், மாடு குதிரை முதலியவைகளுக்குப் புண், நோய் முதலிய எவையேனும் நேர்ந்தால், அவற்றை வண்டியிற்

கட்டி நடத்தலாகாது என்று தடுக்கிறார்கள். அவர்கள், அவை கட்டப்படும் இடம், அவற்றிற்கான தீனி முதலியவற்றையும் சரிவரக் கவனிப்பார்களானால், மிக்க நலமாக இருக்கும்.

---

19. தேசிங்கு ராஜன் - I

செஞ்சி என்னும் சிற்றூர், தென்னார்க்காடு ஜில்லாவில் திண்டிவனத்திற்கு 14 மைலில் உள்ளது. அங்கே 17 - ஆம் நூற்றாண்டின் இடையில் தேசிங்குராஜன் என்னும்சிற்றரசன் செங்கோல் செலுத்தி வந்தான். அவன், ஆர்க்காட்டு நவாபுக்கு அடங்கியவனாய், அவனுக்குக் கப்பம் கட்டிவந்தான். ஆர்க்காட்டு நவாபு, டில்லி பாதுஷா ஆகிய ஷா ஆலம் என்பவனுக்கு அடங்கினவன் ; ஆதலால், அவன் அப் பாதுஷாவுக்கு இறை செலுத்திவந்தான்.

தேசிங்கு ராஜன் திறல் மிகுந்த வீரன். அவன் தன் குடிகளுக்கு எவ்வகையிலும் துன்பம் நேராமல், இன்பமே வளரும்படி அரசை நன்கு நடத்தி வந்தான். குடிகளும் அவனைக் கண்கண்ட தெய்வமாகவே எண்ணி, வணங்கி வாழ்த்தி வாழ்ந்து வந்தனர்.

டில்லி பாதுஷாவிடம் வர்த்தகன் ஒருவன் சிறந்த குதிரை ஒன்றைக் கொண்டுவந்தான்.


சிறந்த பொருள்களெல்லாம் திறல்வாய்ந்த அரசர்களுக்கே உரியதென்பது அக்காலத்துக் கொள்கை.

அக் குதிரையை ஏறி நடத்தவல்ல இளைஞர் அங்கு எவரும் இலர். வீரர்கள் அனைவரும் அக்குதிரையின் அருகிற் செல்லவும் வெருவி நின்றனர். அதுகண்ட டில்லிபாதுஷா, 'இக் குதிரையை ஏறி நடத்தவல்லவர் எவரேனும் உளரோ?' என்று, எங்கெங்கும் எழுதிக் கேட்டிருந்தான்; அது கேட்ட பலரும், 'இது யாரால் ஆகும்! அக்குதிரை முரட்டுத்தனம் வாய்ந்ததாமே!' என்று வாளா இருந்துவிட்டனர். சிலர் சென்று, அதனை அடக்கப் பார்த்தனர். அவருட் சிலர் உதைபட்டு விழுந்தனர்; சிலர் கடிபட்டு அகன்றனர்; அதன்மீதேறி அல்லலுற்று அழிந்துபட்டனர் சிலர். இவற்றால் வீரர் பலரும் அதனை அணுகவும் அஞ்சினர்.

தேசிங்கு மன்னன் அந்தச் செய்தியைக் கேள்வியுற்றான். 'என்ன இது! ஒரு குதிரையை அடக்க வீரர்களுக்கு வல்லமை இல்லையா! சிங்கத்தையும் அடக்க வல்ல வீரர்களுக்கு இக் குதிரையை அடக்குவதும் ஓர் அருமையா! நான் சென்று பார்க்கிறேன்! என்னால் முடியுமானால், இந்நாட்டிற்கே ஓர் ஏற்றமன்றோ!' என்று சொல்லி, தன் அன்னையிடம் விடைபெற்று, டில்லிமாநகரத்திற்குச் சென்றான்.

தேசிங்கு மன்னன், டில்லியில் பாதுஷாவைக் கண்டு பணிந்து, ‘அண்ணலே, தம்மிடத்து வந்துள்ள குதிரையை ஏறிச்செலுத்த யான் வந்துள்ளேன்; கட்டளையானல் சவாரி செய்து பார்க்கிறேன்’ என்று விண்ணப்பம் செய்தான். பாதுஷா புன்னகை புரிந்து, ‘அரிய வீரர் அனைவரும் பார்த்துப் பார்த்து விட்டுவிட்டனர்; நீயோ சின்னஞ் சிறுவன்; உனது வீரத்தைக் கண்டு பெரிதும் வியக்கின்றேன்; குதிரையைக் கிட்டிப் பார்; கூடுமானல் ஏறு’ என்றான்.

இளஞ்சிங்கம் போன்ற தேசிங்கு குதிரையை அணுகினன்; கழுத்தின்மேல் தட்டிக் கொடுத்தான். குதிரை இன்புற்றுச் சும்மா இருந்தது. இருக்கவே, நம் தேசிங்கு அதனை இவர்ந்தான்; மெல்லக் கொண்டுவந்து பாதுஷாவின் முன்னே நிறுத்தினன். கண்டான் பாதுஷா; களிப்பென்னுங்கடலுள் ஆழ்ந்தான்; ‘என்னே இச்சிறுவன் திறம்! வீரர்கள் அனைவரும் இவ்வளவும் செய்திலரே! இச் சிறுவன் இவ்வளவு தூரம் குதிரையைச் செலுத்திக் கொண்டுவந்ததே சாலும்!’ என்றான். அருகில் இருந்தோர், ‘அண்ணலே, இவன் இதனைச் சவாரி செய்யட்டும்; இவன் திறத்தை இதனிற் காணலாம்’ என்றனர். அங்கிருந்த வீரரும் தீரரும் மற்றுமுள்ள மாந்தரும் வியப்படையுமாறு அந்தக் குதிரையைத் தேசிங்கு ஏறிச்



செலுத்தினன். அது, வாயு வேகம்போலப் பறந்துசென்றது. அதனைக் கண்டோர், 'இக் குதிரைக்கு முகம் காலில் முளைத்துள்ளதோ!' என்று கருதும்படி, அக் குதிரை காலை நீட்டிக் கழுத்தைத் தாழ்த்தி, தாவிச் செல்வதாயிற்று. அது கண்ட அனைவரும், 'அந்தோ! இந்தச் சிறுவனை இனிக் காண்பது ஏது! இப்படிக் கொண்டுபோகவே, அந்தக் குதிரை அப்படி அடங்கியிருந்ததோ!' என்று இரங்கிக் கூறினர்.

அவர்கள் அவ்வாறு கூறிக்கொண் டிருக்கையில், தேசிங்கு அக் குதிரையைத் திருப்பிக்கொண்டு வந்தான்; பாதுஷாவின்முன் நிறுத்தினன்; குதித்து இறங்கினன்; குதிரையின் கழுத்தில் தட்டிக் கொடுத்தான். குதிரை வேர்த்து விதிர்விதிர்த்து நின்றது. பாதுஷா

கண்டு, பெரு மகிழ்வுகொண்டு, 'நீயே வீரன், நீயே தீரன், உன்னிலும் வீரன் ஒருவரும் இலர்!' என்று புகழ்ந்து வாழ்த்துக் கூறினான்.

பின்னர், பாதுஷா, குதிரை வர்த்தகனைக் கூப்பிட்டு, 'இதன் விலை என்ன?' என்று கேட்டான். வர்த்தகன், 'அண்ணலே, இதன் விலை, "பாரா அஜார்"' என்றான். (அதற்கு பன்னிரண்டு ஆயிரம் என்பது பொருள்) அந்தத் தொகையின் பெயரையே அக் குதிரைக்குப் பெயராகப் பாதுஷா வழங்கினான். பின்பு, தேசிங்கு ராஜனுக்குப் பற்பல வரிசைகளை வழங்கி, அக் குதிரையையும் அவனுக்கே பரிசாக அளித்து, 'செஞ்சிக்குச் சென்று, சிறந்த தனியரசனாய் வாழ்வாய்; வருஷம் ஒரு முறை வந்து எம்மைக் கண்டு செல்வாய்' என்று சொல்லி அனுப்பினான். அங்கிருந்த அமைச்சர் முதலாயினோர், தேசிங்கு மன்னனைப் பெரிதும் புகழ்ந்து, 'நீ என்றும் வாழ்க, உன் வெற்றி என்றும் ஓங்குக' என்று வாழ்த்தினர்.

தேசிங்கு மன்னன் வாகைமாலை சூடித் தன் நகரை அடைந்தான். குடிகள் அனைவரும் கொண்டாடினர்; நல்வர வேற்றனர். செஞ்சி நகரில் சிறந்த திருவிழா நடைபெற்றது. தேசிங்கு மன்னன் சிறப்புறச் சிங்காதனத்தில் அமர்ந்து, செங்கோல் செலுத்துவானானான்.

20. தேசிங்கு ராஜன் - II

ஒரு நாள், தேசிங்கு மன்னன் அரியணையில் சிறக்க அமர்ந்தான்; அமைச்சர் முதலாயினார் எழுந்து வணங்கினர்; புலவர்கள் வாழ்த்துக் கூறினர்; மாகதர் மன்னன் புகழைப் பாடினர். அக்காலத்தே வாயிற்காவலன் அவையில்வந்து, அமைச்சனைப் பணிந்து, ‘அண்ணலே, நபாபு-வினிடமிருந்து ஒரு தூதுவன் வந்து, நமது மன்னரைக் காண, வாயிலிற் காத்திருக்கிறான்’ என்றான். அரசன் கட்டளையினால், அமைச்சன் காவலனை நோக்கி, ‘அவனை உள்ளே வரவிடு’ என்றான். தூதுவன் உள்ளே சென்று, மன்-னனைத் தொழுதுநின்றான். அமைச்சன் தூதனை நோக்கி, ‘என்ன செய்தி?’ என, தூதுவன், ‘அண்ணலே, சில யாண்டுகளாகத் தேவரீர் செலுத்தவேண்டிய இறைப் பொருளைச் செலுத்தாமையால், மன்னர் மன்னர் என்னை இங்கே அனுப்பினர்’ என்றான்.

அதுகேட்ட தேசிங்கு, ‘மன்னர் மன்னனா! இறைப்பொருளா! இனி, இறைப்பொருளை இறுப்பதில்லை, வாள் முனையில் வாங்கிக்கொள்-ளட்டும்; போய்ச் சொல்’ என்று கடுகடுத்துக் கூறினான். அதுகேட்ட தூதுவன், மன்னனை வணங்கித் திரும்பிச் சென்றான்.

தேசிங்கு, தன் அமைச்சர் முதலானவர்-களை நோக்கி, ‘என்ன இது, ஆர்க்காட்டு நபாபு

இறை செலுத்தும்படி கேட்டு ஆளை அனுப்பினான்; இறை ஏது! எவரும் அடக்கமுடியாத குதிரையை யாம் அடக்கி, வெற்றி பெற்றோம். அக்காலத்தே டில்லி பாதுஷா, நம் வீரத்தை வியந்து, நமக்குத் தனியரசு தந்திருக்கின்றான். நாம் அவனுக்கு அடங்கிய சிற்றரசன் என்பதுமட்டும் திரவில்லை. அவ்வாறிருக்க, இவன் இப்போது இறை கேட்பானேன்; வருவதுவரட்டும், வாள் முனையில் காண்போம்' என்றான்.

செஞ்சி நகரினின்றும் சென்ற தூதுவன் ஆர்க்காட்டை அடைந்து நவாபுவை வணங்கி, 'அண்ணலே, தேசிங்கு மன்னன் திறை கொடுப்பதில்லை என்று மறுத்துவிட்டான்; வாள்முனையிற் காணலாம் என்றான்' எனத் தெரிவித்தான். உடனே நபாபுக்குச் சினம் மிக்கது. மந்திரிகளை நோக்கி, 'செஞ்சியின்மேற் படை எடுக்க, உடனே சேனைகளைத் திரட்டுக' என்றான். சேனாதிபதி உடனே சென்று படைகளைத் திரட்டலானான். நபாபுவும் போர்க் கோலங்கொண்டு புறப்பட்டான். சேனை வந்து செஞ்சிக்கு அருகில் நின்றது.

ஒற்றர், எதிரியின் சேனை எதிர்த்து வந்து நிற்பதை உணர்ந்து, ஓடோடியுஞ் சென்று, மன்னனுக்குத் தெரிவித்தனர். அது தசரா பூஜைத்தினமாகையால், அரசன் அலட்சியமாக எண்ணி, தன் பூஜையிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான். அது கண்டு தேசிங்கு-

வின் சிற்றப்பன் வந்து, 'என்ன இது! பூஜை நாளைக்காகட்டும், புறப்படு சண்டைக்கு; தலைமேல் அம்பு பறக்கிறதே!' என்றான். தேசிங்கு, சேனை திரட்டும்படி அமைச்சருக்குக் கட்டளையிட்டான். மகம்மதுகான் என்னும் சேனாவீரன் அப்போது அங்கேயில்லை; அதனால் அவனுக்கு அரசன் ஆள் விட்டான். சிப்பாய் ஒருவன் மகம்மதுகானை அழைத்துவர வல்தாவூருக்கு, குதிரையேறி, விரைந்து சென்றான்.

தேசிங்குமன்னனுக்குத் திருமணம் நடந்து சில நாள் ஆயின. 'மற்றும் சில நாள்வரையில் அவன், மனைவி முகத்தைப் பார்த்தல் கூடாது' என்று ஜோதிடர் சொல்லியிருந்தனர். சண்டைக்குப் போகுமுன் தேசிங்கு தன் மனைவியைக் கண்டுபேசி, அவள்பால் விடைபெற்றுப் போக எண்ணினான்; அதனை அந்தப்புரத்துக்குத் தெரிவித்தான். அங்கே ஒரு கூடத்தில் ஒரு பட்டுச் சீலையைத் திரையிட்டு, ராணி வந்து அப்புறத்தே நின்றாள்; ராஜா சென்று இப்புறத்தே நின்றான்; 'பெண்மணி, இன்று யான் போர்மேற் செல்கின்றேன்; ஆர்க்காட்டு நவாபு வந்து அணி வகுத்து நிற்கின்றான்' என்றான்; அது கேட்ட ராணி, 'அந்தோ, நாம் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் இதுகாறும் கண்டதில்லையே! தாம் வெற்றி பெற்று வீரத்தோடு திரும்பிவருக' என்று, ஓர் எலுமிச்சம் பழத்தைத் திரையின் வழியே நீட்டினாள்.

அவன் அதைப் பெற்றுக்கொண்டு, கையின் அழகை உற்று நோக்கி, 'பெண்மணி, உன் கைவனப்பு என் கருத்தைக் கவர்கின்றதே! உன் அங்கையே இவ்வளவு அழகா யிருப்பின் உன் கமலமுகம் எவ்வாறிருக்குமோ! அதனைப் பாராமலே செல்லும்படி நேர்ந்ததே!' எனக் கூறிச் சிந்தித்தான். அப்போது அவன் கண்ணினின்றும் ஒரு நீர்த்துளி அவள் அகங்கையில் விழுந்தது. வெப்பமிக்க அந்தத் துளி விழுதலும், அவள்



தன் கையை விரைந்து இழுத்துக்கொண்டு, 'என்ன இது! வீரராகிய உமக்கு விழியில் நீர் வரலாமோ? இஃது ஆண்மைக்கு அழகோ!' என்று வீரத்துடன் கூறினாள்.

அதுகேட்ட தேசிங்கு, வீரம் மிக்கவனாய், 'பெண்மணி, வெற்றி மாலை புனைந்து விரைந்து வருகின்றேன்' என்று திரும்பினான். ராணி, 'என் ஆருயிர்க் காதலரே, ஒன்று சொல்வேன்: நீர் வரும்போது வெற்றி மாலையோடு வருக; இன்றேல், மார்பிற் காயம்பட்டு வருக; முதுகு காட்டிமட்டும் வாராதீர்' என்றாள்.

தேசிங்கு உடனே புறப்பட்டான்; போர்மேற் சென்றான். அதற்குள் மகம்மதுகானுக்குச் செய்தி எட்டிற்று. அப்போது அவனுக்குத் திருமணம் நடக்குங் காலம்; போர் என்று கேட்டவுடனே, அவன் புறப்படலானான். அங்கிருந்தோர் அனைவரும், அவனைத் தடுத்தனர். அவன், மன்னவன் பணி முதன்மையானது; மணமோ அதன் பின்னது; ஆதலால், ஒரு நொடிப்போதும் காலந் தாழ்த்தேன்' என்று சொல்லி, குதிரையின்மேல் ஏறிப் புறப்பட்டுச் செஞ்சியை அடைந்தான்.

இருவர் சேனைகளும் கைகலந்து சண்டையிட்டன. 'பாரா அஜார்' என்னுங் குதிரை, மன்னனுக்குப் பெருந் துணையாய் நின்றது. ஆர்க்காட்டு நவாபு சூழ்ச்சிகள் பல செய்தான். அவற்றை எல்லாம் தேசிங்கு அறிந்து, தக்கவாறு தடுத்துப் போர் புரிந்தான். மகம்மதுகானும் அரசனுக்குத் துணை புரிந்துவந்தான். அதுகண்டு நவாபு, 'கோடரிக்காம்பு குலத்தைக் கெடுக்கிறதே!' என்று குறை கூறினான்.

தேசிங்கு கடைசியாக நவாபுவை வாளால் வெட்டத் துணிந்து, தன் குதிரையை, அவன் ஏறியிருந்த யானையின்மீது பாயும்படி ஏவினான். அஃது அவ்வாறே செய்கையில், யானையின் அடிவயிற்றில் ஏணை கட்டிப் பதிவிருந்த வீரன் ஒருவன், அதன் காலை வெட்டி வீழ்த்தினான்; அதனால் குதிரை விழுந்துவிட்டது. தன் உயிர்போன்ற குதிரை விழுந்துபடவே, மன்னன் மனங் கலங்கி, வாளைச் சுழற்றிக்கொண்டு நின்றான். அப்பொழுது மகம்மதிய சேனை விரைந்து வந்து, தேசிங்கு ராஜனைச் சூழ்ந்துகொண்டது. இனித் தான் உலகிலிருந்து பயனில்லை என உணர்ந்து, தேசிங்கு, வாளை ஓங்கி வானில் எறிந்து, தன் மார்பைக் காட்டிநின்றான்; வாள்முனை மார்பில் தைக்கவே, மன்னன் மண்ணில் விழுந்து உயிர்துறந்தான்.

காவலர் அதுகண்டு மனங்கலங்கி, 'ஐயோ' என்று ஆரவாரித்து, உடலை அரண்மனைக்குத் தாங்கிச் சென்றனர். காவலரது அழுகைக் குரலினால் மன்னவன் இறந்துபட்டான் என்று ராணி உணர்ந்தாள். அவள் வாயிலண்டை வந்து, 'எங்கே புண்பட்டது?' என்றுகேட்டாள். 'மார்பிற் பட்டது' என்று காவலர் கூறினர். அது கேட்ட ராணி பெருமகிழ் வடைந்து, திருமணத்தன்று செய்துகொண்ட சிறப்புக்களையெல்லாம் சிறக்க மேற்கொண்டுவந்து, அருகில் நின்றாள். அவள் இட்ட கட்டளையின் படியே

ஏவலாளர் இந்தனம் அடுக்கினர். அதன்மீது தன் கணவன் உடலைக் கிடத்தச் செய்து, தான் இறைவனை இறைஞ்சி, 'வஞ்சகம் வாய்ந்த மற மன்னர் வாழாதொழிக' என்று சொல்லிக்கொண்டே பக்கலில் படுத்தனள். காவலர் தீ மூட்டி எரித்தனர்; இருவரும் சாம்பலாயினர்.




அதனைக் கண்ட நவாபு, தான் எண்ணுதியற்றிய வஞ்சகச் செயல்களை எண்ணியெண்ணி நெஞ்சம் புண்ணே யாயினான்; கற்பரசியாகிய அப் பெண்மணியின் பெயர் இந் நிலவுலகில் என்றும் நிலவும்வண்ணம், 'ராணிப் பேட்டை' என்னும் நகரத்தை அவள் பெயரால் ஏற்படுத்தினான்.

21. மயூர சிங்காதனம்

ஔரங்கஜேப் என்னும் மொகலாய சக்கரவர்த்தி 1658-ஆம் வருஷம் இந்தியாவில் ஆட்சி புரிந்த காலத்தில், அவன் மனத்தில் புதியதோர் எண்ணம் பிறந்தது. அஃது என்னையெனின்:

தான் சிங்காதனத்தில் வீற்றிருக்கையில், ஒருமயில், தன் தோகையை விரித்துத் தனக்கு நிழல்செய்வதுபோல் அமைத்து, ஓர் அழகிய உருவஞ்செய்து, அதனைச் சிங்காதனத்தின் மீது அமைக்க வேண்டும் என்பதாம். அம்மயிலின் தலை, கழுத்து, சிறகு, தோகை முதலிய உறுப்புக்களுக்கு ஏற்க விலை யுயர்ந்த நவமணிகள் இழைத்து, மயூர சிங்காதனம் ஒன்று செய்யும்படி கட்டளை யிட்டான். அது செய்து முடிந்ததும், அதற்கு அவன், 'தக்தே தாவூஸ்' (மயில் ஆசனம்) என்று பெயரிட்டான்.



'ஒளி மலை' என்னும் பொருள் வாய்ந்த 'கோகினூர்' என்பதும், 'ஸைனாயி மலை' என்னும் பொருள் வாய்ந்த 'கோகிதூர்' என்பதும் ஆகிய இரண்டு சிறந்த வைரங்கள் அம்மயிலுக்குக் கண்களாக இழைக்கப் பெற்றன;

அது செய்து முடிந்ததும், அரசன், தனக்குச் 'சிங்காசன பூஷணம்' என்னும் பொருள் தரும் 'ஔரங்கஜேப்' எனப் பெயர் பூண்டு, அம் மயிலாசனத்தில் சிறக்க அமர்ந்து, தான் வாழ்ந்த எண்பத்தேழு வயதுவரையில் அந்தச் சிங்காதனத்தில் வீற்றிருந்து அரசு செலுத்தினன். அவனுக்குப் பின்வந்த அரசர்களின் வசத்திற்பட்ட அம் மயூர சிங்காதனத்தின் மகிமை குன்றிப் போயிற்று; கற்களெல்லாம் பிரிக்கப்பட்டுச் சிதறிப் போயின.

நாதர்ஷா என்னும் பாரசீக அரசன், டில்லியைக் கொள்ளையடித்துக் கைப்பற்றிக்கொண்டு, மயூரசிங்காதனத்தில் இழைத்திருந்த வயிரம் முதலிய மணிகளைப் பறித்துக்கொண்ட போது, கோகினூர் என்னுஞ் சிறந்த வயிரம் மாத்திரம் காணப்படவில்லை; அதனைக் கண்டுபிடிக்க அவன் செய்த முயற்சிக ளெல்லாம் வீணாயின; முடிவில் அந்தப்புரத்தி லிருந்த பெண் ஒருத்தி நாதர்ஷாவைப் பார்த்து, 'அரசே, தோல்வியடைந்த முகம்மதுஷா என்னும் மன்னர் அவ் வயிரத்தைத் தமது தலைப்பாகைக்குள் மறைத்து வைத்துக்கொண் டிருக்கின்றார்' என்று சொல்லினள். விலைமதிக்க முடியாத அவ் வயிரக் கல்லைத் தான் அடையும் பொருட்டு நாதர்ஷா ஒரு தந்திரம் செய்தான்.

முகம்மதுஷாவும், நாதர்ஷாவும் கலந்து பேசிச் சமாதானம் செய்துகொண்டபோது,

நாதர்ஷா, முகம்மது ஷாவை நோக்கி, 'நமது சமாதானத்துக்கு அறிகுறியாக நம் தலைப் பாகைகளை மாற்றிக் கொள்ளுவோம்' என்று சொன்னான். ஒரே நிலையிலுள்ள அரசர்கள் அப்படிச் செய்துகொள்வது அந்தக் காலத்து வழக்கம். முகம்மதுஷா அதனை மறுத்துக் கூற முடியாதவனாகி, அதற்கு உடன்பட நேர்ந்தது.

நாதர்ஷாவின் பாகையோ வயிரங்கள் பதிக்கப் பெற்றது; ஆயினும், அஃது ஆட்டுத் தோலால் செய்த ஒரு பகடி. மகம்மதுஷா தன் முகத்தில் சுளிப்பும் திகிலும் காட்டாமையால், நாதர்ஷா தான் செய்த உபாயம் பயனற்றதாகுமோ என்று நினைக்கும்படியாயிற்று. ஆயினும், பாகையை மாற்றிக்கொண்டதும், நாதர்ஷா தன் கூடாரத்துக்குட் சென்று அத் தலைப்பாகையைப் பிரித்துப் பார்த்தபொழுது, அவ் விலையுயர்ந்த வயிரம் அதனுள் இருக்கக் கண்டான். கண்டு, 'கோகினூர்!, கோகினூர்!' என்று உரத்துக்கத்தி அளவிறந்த மகிழ்ச்சி கொண்டான். பின்பு, சீக்கியர் நாதர்ஷாவைத் தோற்கச் செய்தபோது, கோகினூர் அவர்கள் கைவசமாயிற்று; அது ரஞ்சித்சிங் என்னும் சீக்கிய வீரனுக்குக் கிடைத்தது.


1849-ஆம் வருஷம் ஆங்கிலேயர் பஞ்சாப் தேசத்தைத் தம் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டபோது, லாகூர் துரைத்தனத்தார் அங்கிலேயருக்குக் கொடுக்கவேண்டியகடனுக்

காக அவரது பொக்கசத்தைக் கைப்பற்றுகையில், கோகினூர் என்னும் அந்தச் சிறந்த வைரமணியை இங்கிலாந்தின் மஹாராணியாருக்கும் பரிசாகக் கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்தனர். இஸ்ட் இந்தியா கம்பெனியார் அவ் வயிரத்தைப் பெற்று, லாரென்ஸ் பிரபு (Lord Lawrence) வினிடத்தில் ஒப்பித்தனர். அவர் அதைத் தம் சட்டைச் சாக்கில் வைத்து மறந்துவிட்டனர். அவர் ஒரு விருந்துக்குப் போகவேண்டி யிருந்தமையால், தம் உடையைக் கழற்றி, ஒருபுறம் எறிந்துவிட்டு, வேறு உடையை உடுத்துக் கொண்டு போய்விட்டார்.

சில நாட்களின் பின் அவ் வயிரமணியை அனுப்பும்படி, அப்போது கவர்னர் ஜெனரலா யிருந்த டாலவுசீ பிரபு (Lord Dalhousie) வுக்கு மஹாராணியார் உத்திரவு அனுப்ப, அவர் அதை உடனே அனுப்புமாறு லாரன்ஸ் பிரபுவுக்குக் கட்டளை அனுப்பினார். லாரன்ஸ் திடுக்கிட்டு, தம் மறதியைப் பற்றிப் பெரிதும் வருந்தி நின்றார். அவர் உடனே சென்று அதனைத் தேடிப்பார்த்தபோது, 'அது சட்டைச் சாக்கிலேயே இருந்தது; நான் எடுத்து வைத்தேன்' என்று ஒரு வேலைக்காரன் கொண்டுவந்து கொடுத்தான். லாரன்ஸ் பிரபு அது கண்டு, பெரு மகிழ்வு கொண்டு, அதனைக் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பிவிட்டார். அதைப்பற்றி அவர் எழுதியதாவது :

'துருக்கருடைய பாகடியிலும், மொகலாயருடைய மகுடத்திலும் ஒளிவீசிக்கொண்டிருந்த வயிரமணி, பாரசீகர், சீக்கியர் முதலியோர் நாட்டை வெற்றிகொள்ளக் கத்தியை உருவின போதும் என் சட்டைச் சாக்கிலேயே அடங்கியிருந்தது; இப்போது கண்ணிற் காணாமற் போகத்தக்க அபாயமும் அதற்கு நேரிட்டதே!' என்பதாம்.

கோகினூர் என்னும் அவ்வயிரக்கல் நமது மஹாராணியாருடைய மணிமுடியில் பதிக்கப்பெற்று ஒளிர்கிறது. 'வின்சர்மஹல்' என்னும் அரண்மனையில் அதைப் போன்ற உருவக்கல் ஒன்று காட்சியாக வைக்கப்பட் டிருக்கிறது.



[விக்டோரியா மகாராணியார் மணிமுடி]

செய்யுள்

கடவுள் வாழ்த்து

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய். (1)

நீலங்கொள் மேகத்தின் — மயின்மீதே
நீவந்த வாழ்வைக்கண் — டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் — மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் — தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் — டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் — குலகாலா
நாலந்த வேதத்தின் — பொருளோனே
நானென்று மார்தட்டும் — பெருமாளே. (2)

மிடுக்கிலா தானை வீம னேவிறல்
விசய னேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலா தானைப் பாரியே யென்று
கூறி னுங்கொடுப் பாரிலை
பொடிக்கொள் மேனியன் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேலம ருலக மாள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே. (3)

தனிப் பாடல்

சென்னிமலைவேலவற்குச்சேர்ந்தகொம்பிரண்டுண்டு
கன்னிகுற வள்ளிக்குக் காலில்லை—முன்னமே
ஆட்டுக்குக் கொம்பில்லை ஆனைக்குக் காலில்லை
பாட்டுக்குள் ஆராய்ந்து பார். (1)

எட்டேகால் லட்சணமே எமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாய் அது. (2)

முன்னாக நீரளக்கும் முடிமன்னர்
கரத்திருக்கும் முனிகள் என்னை
மன்னுமல் ஓட்டுவிக்கும் மந்தரைச்சொற்
கேட்பிக்கும் மடக்கும் மாட்டைப்
பன்னாகத் தலைநறுக்கும் பாலரைச்சொற்
கேட்பிக்கும் படிப்புண் டாக்கும்
எந்நாளும் கிழவருக்கோர் இருப்பாகும்
நடைகொடுக்கும் என்கைக் கோலே. (3)

விறகு பிளக்கக் கறிநறுக்க
வெண்சோற் றுப்புக் கடகுவைக்கப்
பிறகு பிளவு கிடைத்ததென்றால்
நாலா றாகப் பிளந்துகொள்ளப்
பறகு பறகென் றேசொறியப்
பதமா யிருந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப் போனதுண்டோ
எடுத்தி ராயிற் கொடுப்பீரே. (4)

வாக்குண்டாம்

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. (1)

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு — மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம். (2)

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் — தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை. (3)

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா — கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். (4)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் — சவைநடுவே
நீட்டோலை வாசியான் நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். (5)

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் — தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (6)

அடக்கம் உடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா — மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. (7)

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடொப்பாரும்போல்வரே-விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். (8)

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் — கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். (9)

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு — நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். (10)

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் [குக்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் — மன்னனுக்
தன்றேசம் அல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. (11)

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர் — மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம். (12)

நல்வழி

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. (1)

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (2)

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் — வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். (3)

ஒருநாள் உணவையொழி என்றால் ஒழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய் — ஒருநாளும்
என்னோ அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது. (4)

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே — ஏற்றம்
உழுதுண்டு வாழ்வுதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (5)

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. (6)

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் — கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம். (7)

ஆன முதலில் அதிகஞ் செலவானல்
மானம் அழிந்து மதிகெட்டுப் — போனதிசை
எல்லார்க்குங் கள்ளனய் ஏழ்பிறப்பும் தீயனய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு. (8)

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்ருகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். (9)

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன - கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையும் சஞ்சலமே தான். (10)

ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆம்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் — சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. (11)

[யின்

கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டா
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் — இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்
செல்லா தவன்வாயிற் சொல். [வேண்டாள்

இராம சந்திரன்

ஆண்டகை அரசர் கோமான்
அயோத்தியன் அரிய நீதி
பூண்டவன் தசர தப்பேர்
பொறுத்தவன் புகழின் வாழ்வோன்
மாண்டநற் கற்பு வாய்ந்த
மனைவியர் மூவ ருள்ளும்
நீண்டவள் கோச லைப்பேர்
நேர்ந்தவள் நேரி லாதாள். (1)

இணையிலா அழகன் என்றே
இருநிலத் தவர்கொண் டாடி
அணையுநல் வனப்பு வாய்ந்த
அரும்பெறல் இராமன் றன்னைப்
பிணையுநல் லாத ரத்தால்
பெற்றனள் பெரிது வந்தாள்
துணையுறப் பாங்கி மார்கள்
தொழுதனர் வாழ்த்தெ டுத்தார். (2)

சிறுசிறு சொற்கள் கற்றான்
சேடியர் தெரித்துக் காட்டக்
குறுகுறு நடந்தான் கைகள்
கொட்டியே மகிழ்ந்தான் ஓர்நாள்
கறுகுறு மாலை வானில்
கவின்றது முழுநி லாவும்
மறுவுறும் அதனைக் காட்டி
மைந்தனை மகிழச் செய்தார். (3)

அம்புலீ நீவா இங்கே
அழகனோ டாட என்பார்
அம்புலீ இராமன் உன்னை
அடிக்கிலன் அணைப்பான் என்பார்
அம்புலீ நீவா ராயேல்
அரசர்கோன் அடிப்பான் உன்னை
அம்புலீ ஒளிநி னக்கவ்
வாதித்தன் அருளான் அன்றே. (4)

செவிலியர் இவ்வா றோதச்
சேயனும் சிரித்து நோக்கி
அவிதலில் லாத ஆசைப்
பெருக்கினல் வருக என்றான்
புவியில்வா ராமை கண்டு
பொருமியே அழுத லோடும்
செவியுறக் கேட்ட தாயும்
தந்தையும் சேர வந்தார். (5)

கோசலை ஓடி வந்தாள்
குழந்தையை அணைத்தெ டுத்தாள்
வாசமார் மலரே தேனே
வாய்திறந் தழுதல் என்னே
தேசுறு முகம்சி வப்பத்
தேம்பிநீ அழுதல் ஆமோ
ஆசையார் அமுதே கண்ணே
அப்பனே அழாதை என்றாள். (6)

மைந்தனோ வானைக் காட்டி
மலர்க்கரந் தன்னை நீட்டி
இந்துவை வேண்டி வேண்டி
ஏங்கியே அழுதல் கண்டு
சிந்தையுங் கலங்கி வேந்தன்
திறல்மிகு அமைச்சர்க் கூவ
வந்தனர் அவருந் தேர்ந்து
வழிபல வகுத்திட் டாரால். (7)

வெள்ளிய மணியி ழைத்த
விதவிதப் பணிகொ ணர்ந்தார்
ஒள்ளிய வயிரத் தாற்செய்
ஒளிர்நகை கொணர்ந்து வைத்தார்
தெள்ளிய சிறப்பின் வெண்மை
திகழ்குடை கொணர்ந்து வைத்தார்
துள்ளியே அவற்றை யெல்லாம்
தூரத்தில் எறிந்து பின்னும். (8)

வீறிட அழுத மைந்தன்
விழியில்நீர் துடைத்துத் தந்தை
மாறிடா விதனங் கொண்டே
மதிமிகும் அமைச்சர் தம்முள்
தேறிய மதியு ளானும்
திறல்சுமந் திரனைக் கூவ
ஆறிய மதியால் ஆய்ந்த
அறிவனும் ஆங்கண் உற்றான். (9)

உற்றவை யனைத்தும் ஓர்ந்தே
  ஒளிமிகும் நிலைக்கண் ணாடி
பற்றியே கொணர்ந்து சேயின்
  பக்கலில் அமர வைத்துச்
சுற்றிய வானில் ஓங்கித்
  தோன்றிய நிலவு தன்னை
மற்றுமப் பளிங்கு தன்னில்
  மாண்புற நிலவச் செய்தான். (10)

கண்டது சிறுகு ழந்தை
  களிப்புறக் கண்டு கண்டு
கொண்டது பெருங்க ளிப்புக்
  கொண்டது பெருஞ்சி ரிப்பு
கண்டனர் பெற்றோர் மற்றோர்
  களிமகிழ் சிறந்தார் அன்று
விண்டனர் இராம சந்த்ரன்
  எனும்பெயர் விளங்க நன்றே. (11)

குறிப்புரை

வசனம்

அகங்கை - உள்ளங்கை.
அகண்ட-பிளவுபடாத; வேறுபடாத.
அணி வகுத்து - (படைகளை) ஒழுங்காகவகுத்துநிறுத்தி.
அந்தப்புரம் - அரசி இருக்கும் இடம், உவளகம்.
அந்தி - சந்தி.
அமைச்சர் - மந்திரிமார்.
அமைதி - பொறுமை.
அரசவை - ராஜசபை.
அரதனம் - இரத்தினம்.
அரியணை - சிங்காதனம்; அரி - சிங்கம்.
அரிஸ்தோத்தல் - கிரீஸ்தேசத்துச் சிறந்த தத்துவ சாஸ்திரி; கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.
அருந்திறல் - அரிய திறமை.
அருந்துவது - தின்பது.
அர்ப்பணம் - நிவேதித்தல்; கொடுத்தல்.
அல்லல் - துன்பம்.
அவதாரம் - மேலிருந்து கீழே இறங்குதல்; இது, பெரியோர் பிறப்பதற்குச் சொல்லும் மாபுமொழி.
அவை - சபை.
அனுபவம் - புலன்கள் அறிவுறச்செய்யுஞ் செயல்.
அனுமான் - தாடையில் சிறப்புடையவன்; அனு-தாடை.
ஆக்கிரா - (ஆக்ரா) இதற்கு முகலாயர் வழங்கும்பெயர் 'அக்பர் ஆபாத்' என்பது.
ஆயுர்வேத பண்டிதர் - வைத்தியர்; (ஆயுஸ் வேதம் - வைத்திய சாஸ்திரம்)
ஆரவாரித்து-பேரொலிசெய்து
ஆர்க்காட்டு நபாபு - இவன் பெயர் ஸ ஆதத்துல்லா கான் என்பது.
ஆஜாநுபாஹு-(ஜாநு-முழங்கால், ஆ-வரையில், பாகு-கை) முழங்கால் வரையும் நீண்டகையையுடையவன்.

இசைதல் - உடன்படுதல்.
இதுகாறும் - இது வரையும்.
இந்தனம் - விறகு.
இயலாது - முடியாது.
இயற்றிய - செய்த.
இயன்று - அமைந்து.
இயைந்து - அமைந்து.
இலகும் - விளங்கும்.
இலியட்-இது கிரீஸ்தேசத்து முதன்மையான ஆசிரியராகிய ஹோமர் என்பவர் இயற்றிய பெருங்காப்பியம்
இவர்ந்தான் - எதிர்செலுத்தி [னன்.
இறுதி - முடிவு; சாவு.
இறுப்பது - செலுத்துவது.
இறை - கப்பம்.
இறைஞ்சி - வணங்கி.
இன்சொல் - இனியசொல்.
இன்னிசை - இனிய ஓசை; சங்கீதம்.
இடு - ஒப்பு.
இடுபட்டு-அகப்பட்டு; மனங் [கவிந்து.
உகிர் - நகம்.
உதராக்கினி-(உதர - அக்கினி) வயிற்றுத்தீ; பசி.
உபத்திரவம் - துன்பம்.
உரோமக்கவசம் - மயிர்நிரம்பியிருப்பது.
உவப்பு - மகிழ்ச்சி.
உளம் - மனம்.
உன்னதம்-உயர்வு; மேன்மை.
ஊர்வது - நகர்வது.
ஊறு - இடையூறு, துன்பம்.
எடுப்பு - உயர்வு.
எய்த - அடைய.
எழில் - அழகு.
எளிமை - இலேசு; இலகு.
ஏற்றம் - உயர்வு.
ஐயம் - சந்தேகம்.
ஒளிரும் - விளங்கும்.
ஒற்றர் - வேவுகாரர்; உளவு அறிந்து வருவோர்.
ஓஷதி - மருந்துக்கு உதவுங் கொடி முதலியவை.
ஔரங்கசீப் - (ஔரங்க் ஜேப்) சிங்காதனத்துக்கு அணி; (ஔரங்க் - சிங்காதனம்; ஜேப் - அணி).

கடுஞ்சினம் - அதிக கோபம்.
கண்காணித்து-மேற் பார்வையிட்டு.
கருவுயிர்க்கும்-பிள்ளைபெறும்.
கல்யாணகுணம்-நல்லகுணம்; மங்களகுணம்.
கவர்ச்சி - இழுத்தல்.
கழி - கொம்பு.
கன்னியர்-கலியாணம் ஆகாத பெண்டிர், கன்னியா ஸ்திரிகள்.
காட்சிக்கு எளிமை - பிறர் வந்து காணுதற்கு எளிதாக இருத்தல்.
காதல் - அன்பு.
காபூல் - (காபுல்) ஆப்கானிஸ்தானத்தின் தலை நகர்.

காவதம் - ஏழரை நாழிகை வழி; பத்து மைல்.

கான்ஸ்தாந்திநோபில்-ஐரோப்பியத் துருக்கி தேசத்தின் தலைநகர்.

குறிப்புப் புத்தகம் Note-Book.

கோகினூர் - இது, கோலகொண்டா என்னும் இடத்தில் கிடைத்த சிறந்த வைரக்கல். (கோஹி-மலை, நூர்-ஒளி).

கோலகொண்டா - நிஜாம்ராஜ்யத்தில் கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள ஒரு நகரம்.

சந்நிதானம் - (சம்-நிதானம்) அருகு; திருமுன்.

சாலும் - அமையும்; போதும்.

சிகரம் - உச்சி.

சித்தாந்தம் - முடிவான கொள்கை.

சீக்கியர்-இவர்கள் மதவைராக்கியமுள்ள வீரர்கள்; பஞ்சாப்தேசத்தில் வசிப்பவர்; குரு நானக் இவர்களுக்கு முதல் ஆசாரியர்.

சீர்மை - திருத்தம்.

சுதந்திரம் - உரிமை.

சுமத்ரா - இந்துசமுத்திரத்தில் உள்ள ஒரு தீவு.

சூழ்ச்சி - உபாயம்.

செய்கடன்-செய்யவேண்டிய கடமை.

சென்ட்பீட்டர்ஸ்பர்க்-ரஷியா தேசத்தின் தலை நகரம்; இப்போது 'பீடர் கிராட்' என்பது பெயர்.

தகர்த்து - இடித்து.

தக்தே தாவூஸ் - (தாவூஸ் - மயில்; தக்தே - சிங்காதனம்.) மயூர சிங்காதனம்.

தசராபூஜை-புரட்டாசிமாதம், பூர்வ பக்ஷத்துப் பிரதமை முதல் தசமிவரையில் பத்து இரவு நடத்தும் பூஜை; நம் நாட்டில் நவராத்திரி பண்டிகை என வழங்கும்.

தாகம் - தாபம்; நீர்வேட்கை.

தாழ்நடை - பணிவானநடை.

திண்டிவனம் - திந்த்ரிணீவனம் என்பதன் சிதைவு; புளியங்காடு என்பது பொருள். திந்த்ரிணி-புளி.

திண்மை - உறுதிப்பாடு.

திமில் - முசுப்பு.

தியாகம்-கொடுத்தல்; விடுதல்.

தியானம் - இடைவிடாது நினைத்தல்.

திருஷ்டாந்தம் - பார்க்கப்பட்ட நிச்சயம் உடையது; எடுத்துக் காட்டுதல்.

திரைத்து - தோல் மடிந்து.

திவ்ய க்ஷேத்திரம் - சுவர்க்க சம்பந்தமுள்ள இடம்; மேலான இடம்.

திறல் - வலிமை.
துணைப்பொருள் - உதவியாக வேண்டும் பொருள்.
துவஜஸ்தம்பம் - கொடிமரம்.
துவஜம் - கொடி. [பெற்ற.
துறவறம்பூண்ட - சந்நியாசம்
தேசிங்கு - (தேஜ் சிங்க்) கி. பி. 1714-ஆம் ஆண்டில் செஞ்சியை ஆண்ட சிற்றரசன்.
தோற்றம் - காட்சி.
நபாபு - இது நவ்வாப் என்பதன் திரிபு.
நல்லியல் - நல்ல தன்மை.
நல்லியல்பு - நல்ல தன்மை.
நாட - தேட.
நிபந்தனை - கட்டுப்பாடு.
நியமனம் - ஏற்பாடு.
நிருமித்தல் - ஏற்படுத்துதல்.
நிலவும்வண்ணம்-நிலைபெற்று விளங்கும்படி.
நீர்நிலை - நீர் நிற்கும் இடம்.
நண்ணிய - நட்பமான.

பகடி-ஒருவிதத் தலைப்பாகை.
பஞ்சாப் - ஐந்து நதிகள்பாயும் பிரதேசம்; இந்தியாவின் வடமேற்கிலுள்ள ஒருநாடு (பஞ்ச - ஐந்து; ஆப் - நீர், நதி.)
பணி - தொழில்.
பதிவிருந்த - பதுங்கியிருந்த.
பலி - தேவர் உணவு.
பாகன் - நடத்துபவன்.
பாதுஷா - (பாத் ஷாஹ்) சக்கரவர்த்தி.
பாரசீகர்-பெர்ஷியாதேசத்துப் பழங் குடிகள்; (Parsees)
பாரா அஜார் - (பாரா - பன்னிரண்டு, ஹஜார்-ஆயிரம்) பன்னிரண்டு ஆயிரம் விலையுள்ளது; பாராஜாரி என வழங்கும்.
பிணிக்க - கட்ட; கவர.
பிரதிமை - பதுமை; உருவம்.
பிரயாணம்-செலவு; யானம் - நடை.
பிரஷியா - ஜர்மனி தேசத்தில் ஒரு மாகாணம்.
பிளாரன்ஸ் - இதாலிதேசத்திலுள்ள ஒரு சிறந்த நகரம்.
பீடம் - ஆசனம்.
புசிக்க - உண்ண.
புரிந்த - செய்த.
புலப்படாத - தோன்றாத.
புலவர் - அறிஞர்.
புனைந்து - அணிந்து.
புன்னகை - குறுஞ்சிரிப்பு.
பூகம்பம் - பூமி யதிர்ச்சி.
பெண்ணின்-பெண்ணை அடைதலைக் காட்டிலும்.
பெருந்தகையாளர் - பெருந்தன்மை வாய்ந்தவர்.
பெருந்தக்க - மேலானவை.
பெல்கிரேட் - மத்திய ஐரோப்பாவிலுள்ள ஸெர்வியா தேசத்துத் தலை நகரம்.

பைசா - இதலி தேசத்து வட மேற்கிலுள்ள, 'பைசா' என்னும் மாகாணத்தின் தலை நகரம்.

போக்கசம் - கஜானா; பொருட் சாலை.

போர் - சண்டை.

போர்னியோ - இந்து சமுத் திரத்திலுள்ள ஒரு தீவு.

மக்கள் - மாந்தர்.

மணிமுடி - இரத்தின கிரீடம்.

மனப்பான்மை - மனத்தின் கொள்கை.

மாகதர் - அரசனுடைய வீரம் முதலியவற்றைப் புகழ்ந்து கூறுவோர்.

மாகாணம் - ஒரு தேசத்தின் உட்பிரிவு.

மாண்பு - மாட்சிமை; பெருமை.

மாந்தர் - மனிதர்.

மாஸிடோனியா-கிரீஸ் தேசத் தில் ஒரு மாகாணம்.

முகம்மதுகான்-முஹமத்கான் என்பதுஇவன்பெயர்.

மும்தாஜ் - தேர்ந்து எடுக்கப் பட்டவள், மங்கையர்க் கரசி; மும்தாஜ் பேகம் என்பது இவள் பெயர்; மும்தாஜ் மஹல் என்பது பின்பு ஏற்பட்ட பெயர்; அதற்கு, 'அரண்மனைக் கிரீடம்' என்பது பொருள்; மஹல்-அரண்மனை; அர்ஜுமந்த் பானு பேகம் என்பது இவளது இயற் பெயர்.

முதுரை - பழமொழி.

மோகலாயர் - (முகலாயர்) சீன ராஜ்பத்து 'மங்கோலியா' வின் பழங்குடிகள்; பிற் காலத்தில், 'தாத்தாரியர்' என்றும், 'முகலாயர்' என்றும் பெயரடைந்து, இஸ்லாம் மதத்தைத் தழு வினவர்.

யமுனை - 'ஜம்னா' என வழங் கும். கங்கையின் உபநதி; இது, பிரயாகையில் கங்கை யோடு கலக்கிறது.

யா - எவை.

ரஞ்சித் சிங்-அழகுள்ள சிங்கம் போன்றவன்; சிங்கம் என்பது சிங் என்றாயது.

ராஜப்பிரதிநிதி - அரசனுக்குப் பதிலாயிருந்து ஆணை செலுத்துபவன்.

லிஸ்பன் - போர்ச்சுகல் தேசத்தின் தலை நகர்.

வரி - கோடு; எழுத்து.

வலிந்து கற்பிக்க - இல்லாத தொன்றை ஏற்றிக் கூற.

வனப்பு - அழகு.
வன்கோலே - கொடியகோலே.
வன்மை - வலிமை.
வானம் - சுமந்து செல்வது.
வாகை மாலே - வகைப் பூமாலே; வெற்றி மாலே.
வாயில் (இல்-வாய்) - வாசல்.
வாய்ந்த - அமையப்பெற்ற.
வாய்மை - உண்மை.
விகாரம் - வேறுபாடு; அழகு இன்மை.
விடாய் - சோர்வு.
விதிர் விதிர்த்து - நடுநடுங்கி.
வியந்து - மதித்து.
வியன்ஞு - ஆஸ்த்ரியாதேசத்துத் தலேநகர்.
விலங்கு - குறுக்காக இருப்பது; மிருகம்.
விழைதல் - விரும்புதல்.
விணேத்திட்பம் - செய் தொழிலில் உறுதிப்பாடு.
விஜயம் - வெற்றி, பெரியோர் வருதல்.
வீராவேசம் - (வீர-ஆவேசம்) வீரத்தாலுண்டாகும்வெறி.
வீற்றிருத்தல்-மேம்பாட்டுடன் இருத்தல்.
வைராகியர் - ஆசையில்லாதவர்; இது, பைராகியர் என வழங்குகிறது.

ஜகந்நாதம் - ஜகத்திற்கு நாதஞகிய கண்ணபிரான் தங்குந் தலம்.
ஜஹான்கீர் - (ஜஹான் - கீர்) ஜஹான் - உலகம்; கீர் - வெல்பவன்; உலகத்தை வென்று பிடிப்பவன்.
ஜாவா - இந்து சமுத்திரத்திலுள்ள ஒரு தீவு.
ஜோதிடர் - வான ஒளிகளே நோக்கிக் கணித்துச் சொல்பவர்; ஜ்யோதி - ஒளி.

ஷாஜஹான்(ஷாஹ்-ஜஹான்) ஜஹான் - உலகத்திற்கு, ஷாஹ் - அரசன்.

ஸைஞயிமலே - (Mt. Senai)
ஸ்தாஞதிபதி-அரச ஸ்தானத்திலிருந்து ஆணே செலுத்துபவன்.

ஹேக் - ஹாலந்து தேசத்திலுள்ள ஒரு சிறந்த நகரம்.
ஹோமர் - பண்டைக் காலத்தில் கிரீஸ் தேசத்திலிருந்த பெரும் புலவர்; 'இலியத்' 'ஒடுஸ்ஸி' என்னும் பெருங் காப்பியங்கள் இரண்டை இயற்றியவர்.

குறிப்புரை

செய்யுள்

கடவுள் வாழ்த்து

வெள்ளைக் கலை - வெள்ளை உடை. பணி - ஆபாணம். வெள்ளைக் கமலம் - வெண்டாமரை. வெள்ளை அரி ஆசனம் - தூய்மையான சிங்காதனம்.

இச் செய்யுள், கம்பர் இயற்றியது என்றும், பொய்யா மொழிப் புலவர் செய்தது என்றும், காளமேகப் புலவர் கூறியது என்றும் பலபடக் கூறுவர்; ஒவ்வொரு கொள்கையினரும் ஏற்றவாறு கதை கூறுவர். (1)

மால் - ஆசை. பேதை - பெண். தார் - பூமாலை. வேலை - கடல். சூரபதுமன் மாமரவடிவாகக் கடலில் ஒளித்திருந்த போது, முருகக்கடவுள், வேல்விட்டுக் கடலைக் கலக்கி, அவனைக் கொன்றார் என்பது கதை. நால் அந்த வேதம் - நான்காகிய அந்த வேதங்கள்; அந்த - உலகறி சுட்டு.

இது, அருணகிரி நாதர் இயற்றிய திருப்புகழ். (2)

மிடுக்கு - வலிமை. விறல் - வெற்றியுள்ள. விஜயன் - மிக்க வெற்றியுள்ளவன்; 'வில்லுக்கு விஜயன்' என்பது பழமொழி. பாரி - வள்ளல் எழுவருள் ஒருவன்; இவன் தனக்கிருந்த முந்நூறு ஊர்களையும் இரவலர்க்கு அளித்தவன். பொடி - திருநீறு. அமர் உலகம் - அமரர்உலகம்; தேவருலகம். இனி, மேல் அமர் உலகம் எனக்கொண்டு, தேவருலகம் எனினுமாம்; உம்பருலகு என்றார்போல. ஐயுறவு - சந்தேகம்.

இது, சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்தது. (3)

தனிப்பாடல்

சென்னிமலை - முருகக் கடவுள் தலம்; இது, கோயம் புத்தூர் ஜில்லாவில் காங்கயத்திற்கு 12 மைலில் உள்ளது.

சென்னிமலை வேலவற்கு என்று எழுதுவதில், செ-வே- இவ்வெழுத்துக்களில் கொம்புகள் உள்ளனவாதலின், 'சேர்ந்த கொம்பு இரண்டுண்டு' என்றார். வள்ளி என்று எழுதுவதில் கால் (ா) இல்லை. ஆடு என்று எழுதுவதில் கொம்பு (ெ) இல்லை. ஆனை என்று எழுதுவதில் கால் (ா) இல்லை. (1)

எட்டேகால் என்பது, எண்ணில் எழுதின் அவ என்று ஆகும் : ஆதலின், எட்டே கால் லட்சணம் என்பது, அவலட்சணம் என்றாயிற்று. ஏமன் - யமன். பரி வாகனம்; எமனுக்கு வாகனம் எருமைக் கடா. பெரியம்மை - மூதேவி; மூதேவியின் வாகனம் கழுதை. முட்ட - பொருந்த. மேற் கூரை இல்லா வீடு - குட்டிச் சுவர். குலம் - சிறப்பு. இராமன் தூதுவன் - அநுமான், குரங்கு. ஆரை - எவரை. இனி, ஆரைக்கீரையையும் குறிக்கும் என்க.

இது, 'ஒரு காலடி நாலிலைப் பந்தலடி; அது யாது?' என்று கேட்ட கம்பருக்கு, அவ்வையார் கூறினர் என்பது கதை. (2)

காம் - கை. முனி - பேய். மன்னுமல் - சேர்க்கிராமல். மந்தர் - அற்பபுத்தி யுள்ளவர். மாட்டை மடக்கும் என மாற்றுக. பல் நாகம் - விஷப்பல்லை யுடைய பாம்பு. (3)

பிளவு - பாக்குத் துண்டு.

வாக்குண்டாம்

இந் நூலை இயற்றியவர் அவ்வையார். இந் நூலின் முதலில் 'வாக்குண்டாம்' என்று தொடங்குவதனுல், இது 'வாக்குண்டாம்' என, முதற் குறிப்பால் பெயர் பெற்றது.

கருமங்கள் - தொழில்கள். தொடுத்த - கூட்டமாய்ச் சேர்ந்திருக்கிற. பருவத்தால் அன்றி - உரிய காலத்தினால் அல்லாமல். பழா - பழுக்கமாட்டா. (1)

நுண்ணறிவு - நுட்பமான அறிவு. மேலைத் தவம் - முற்பிறப்பிற் செய்த தவப்பயன். (2)

பொசிதல் - கசிதல். தொல் - பழமையான. (3)

மடல் - இதழ். மகிழ் - மகிழம்பூ; முதலாகு பெயர். கந்தம் - வாசனை. மண்நீர் - (உடல்) கழுவத் தக்க நீர். (4)

கவை - கவடு, அடி மரத்திற்கு மேல் பிரியும் பிரிவு. கொம்பு - கிளை. நின்றான் - தன்முன் வந்து நின்றவனது. (5)

கானம் - காட்டில். அது - அந்த மயில். பாவித்து- நினைத்து. பொல்லா - அழகில்லாத. கவி - பாட்டு. (6)

கடக்க - வெல்ல. கருதவும் - நினைக்கவும். மடைத் தலையில் - மடையினிடத்தில்; தலை - இடம். உறுமீன் - தன் உணவுக்குப் பொருந்திய மீன். (7)

கயவர் - கீழ் மக்கள். கடுஞ் சினத்து - மிக்க கோபத்தினால். போல்வர் (அக் கீழ்மக்களை) ஒப்பர். எய்த - (அம்பினால்) எய்த. வடு - பிளவு. சீர் ஒழுகு சான்றோர் - சிறப்பு மிக்க அறிஞர். (8)

கயத்தில் - குளத்தில். இது, கசம் என வழங்கும். காமுறுவர் - விரும்புவர். கற்பு - கல்வி. மூர்க்கர் - அறிவில்லாதவர். முகப்பர் - விரும்புவர். உகக்கும் - விரும்பும், (9)

நஞ்சு - விஷம். நாகம் - பாம்பு; நகத்திலிருப்பது. நகம் - மலை, மரம். கரந்து - ஒளித்து. அஞ்சா - பயப்படாமல். புறம் - வெளி. கரவு - கள்ளத்தன்மை. காப்பர்- மறைப்பர். கரவார் - மறைத்துக்கொள்ள மாட்டார். (10)

மாசு அற - குற்றம் நீங்க. சீர் தூக்கின் - ஒப்பிட்டுப் பார்த்தால். மன்னனின் - அரசனைக் காட்டிலும். (11)

தீயனவே - கெட்ட செயல்களையே. செய்திடினும் - (பிறர், தமக்குச்) செய்தாலும். ஆம் தனையும் - ஆகும் அளவும். குறைக்குந் தனையும் - வெட்டி வீழ்த்துமளவும். (12)

நல்வழி

நல்வழி - நல்ல வழியைக் கற்பிக்கும் நூல். இந் நூலைச் செய்தவர் அவ்வையார்.

நீதி வழுவா - நீதி தவறாத. நெறி முறையின் - நல்லொழுக்க முறைப்படி. மேதினியில் - உலகத்தில். பெரியோர் - உயர் குலத்தவர். இழி குலத்தோர் - தாழ்ந்த குலத்தவர். பட்டாங்கில் - உண்மையான நூலில். (1)

பெருக்கு - வெள்ளம். அடி - (நடப்பவாது) பாதம். ஏற்றவர்க்கு - இரந்தவர்களுக்கு. நல்கூர்ந்தார் ஆனாலும் - ஏழைகளா யிருந்தாலும். இசைந்து இல்லை என மாட்டார் என மாற்றுக. இசைந்து - மனம் பொருந்தி. (2)

மாண்டார் - இறந்தவர். மா நிலத்தீர் - பெரிய உலகத்திலுள்ளவர்களே. அது வழியே - அதுவே வழி எனப் பிரித்துக் கூட்டுக. போம் அளவும் - சாகும் வரைக்கும். என் என்று - (இவ்வுலகில்) என்ன பயன் உளதென்று எண்ணி. (3)

ஒழி - விட்டிரு. ஏல் - ஏற்றுக்கொள். ஏலாய் - ஏற்றுக் கொள்வாய். என் நோ - என் வருத்தத்தை. இடும்பை கூர், துன்பத்தை மிகுதியாகச் செய்கின்ற. (4)

அரசு அறிய - அரசனும் மதிக்கும்படி. வீற்றிருந்த - மேம்பாட்டுடனே வாழ்ந்திருந்த. விழும் - அழியும். ஏற்றம் - உயர்வு. அதற்கு - அந்த உழவுத் தொழிலுக்கு. ஒப்பு - சரி. பழுது - கேடு. பணி - தொழில். (5)

அற்ற குளத்தின் - நீர் வற்றிய குளத்தினின்று. அறும் - நீங்கிப் போகின்ற. உற்றுழி (உற்ற உழி) - துன்பம் வந்த இடத்தில். தீர்வார் - நீங்கிச் செல்பவர். ஒட்டி உறுவார் - சேர்ந்து உடன் வாழ்பவர். (6)

பாடு - கஷ்டம். கேடு கெட்ட - பெரிதும் கெட்டுப் போன. கூடு - உடல். பாவிகாள் - பாவிகளே. (7)

ஆன முதலில் - உண்டான முதற் பொருளில். மதி - புத்தி. ஏழ் பிறப்பு - ஏழு வகைப்பட்ட பிறப்பு. பொல்லன் - பொல்லாதவன். நாடு - எண்ணிப் பார். (8)

ஒன்றை - ஒரு செயலை. ஒன்றாகும் - வேறொன்றாகும். வந்து எய்தும் - வந்து சேரும். (9)

நாழி - ஒருபடி அரிசி; முகத்தலளவை ஆகு பெயர். நான்கு முழம் - நான்கு முழத் துணி; நீட்டலளவை ஆகு பெயர். எண்பது கோடி - மிகப் பலவான; எண்ணலளவை ஆகு பெயர். கண் புதைந்த - கண் மூடிய; குருட்டுத்தனமான. சஞ்சலம் - துன்பம். (10)

மடு - பள்ளம். மாறிடும் - கீழ்மேலாகும். சார்பு - துணை. உண்ணீர்மை (உள் - நீர்மை) - மனத்தின் தன்மை. வீறும் - மேன்மை யடையும்; உயர்ந்து வீறும் என மாற்றுக. (11)

இல்லானை - பொருளில்லாதவனை. இல்லாள் - மனைவி. ஈன்று - பெற்று. சொல் செல்லாது என மாற்றுக. (12)

இராம சந்திரன்

[இது, கா. நமச்சிவாய முதலியார் இயற்றியது.]

ஆண்டகை - ஆண்மை மிக்கவன்; ஆண் மக்களுட் சிறந்தவன், அரசர் கோமான் - சக்கரவர்த்தி. பொறுத்தவன் - அடைந்தவன், மாண்ட - மாட்சிமைப்பட்ட. நீண்டவள் - பெரியவள். நேர் - ஒப்பு. (1)

இரு - பெரிய. அணையும் - சேரும். வனப்பு - அழகு. அரும்பெறல் - பெறுதற்கரிய. பிணையும் - பொருந்திய. (2)

சேடியர் - தாதியர். தெரித்து - தெரிவித்து. கறுகு உறு - இருள் அடைகின்ற. கவின்றது - அழகுபெற்று விளங்கியது. தறு உறும் - களங்கம் உள்ள. (3)

அம்புலி - சந்திரனே. ஆதித்தன் - சூரியன், இராமன், சூரிய குலத்தவன்; சூரியனால் சந்திரனுக்குக் கலைகள் உண்டாகின்றன. (4)

செவிலியர் - வளர்ப்புத் தாயர். அவிதல் - கெடுதல். (5)

தேசு உறு - அழகு மிக்க. ஆர் - நிறைந்த. (6)

இந்து - சந்திரன். திறல் - வல்லமை. அமைச்சர் - மந்திரிகள். தேர்ந்து - ஆராய்ந்து. (7)

வெள்ளிய மணி - முத்து முதலியன. பணி - ஆபரணம். ஒள்ளிய - ஒளியுள்ள. ஒளிர் - விளங்குகின்ற. (8)

விதனம் - விசனம். சுமந்திரன் - முதல் மந்திரி; சிறந்த ஆலோசனையுள்ளவன். ஆறிய-அமைந்த. ஆய்ந்த-ஆராய்ந்த. (9)

மாண்பு உற - மாட்சிமைப்பட. நிலவ - விளங்க. (10)

களி மகிழ் - மிக்க மகிழ்ச்சி. விண்டனர் - கூறினர். (11)